74

# ஜகன்மோகினி

ஆசிரியை :
வை.மு.கோதைநாயகி அம்ம

2-OCT-19
MADR



## அடுத்த இதழில் புதிய மலர்

## சந்தோஷ மலர்

● மதுசூதனன் ஒரு பரமபக்தன். சங்கீதக் களஞ்சியம்.

● செல்வமும் ஆடம்பரமும் அவனுக்குத் த்ருணம் அதனல் ஜமீந்தாரும் அவன் விரோதியாகிறன்.

● அவனுக்குப் பக்திமார்க்கமே பேரின்ப நிலையாகவும் வாழ்க்கையின் லக்ஷியமாகவும் அமைந்தது.

● அவன் கண்களுக்கு இவ்வுலகமே ஒரு சந்தோஷ மலராகப் புலப்படுகிறது.

● யோ
செய்து
திரட்டா
பெற்றேரும், கே
தரியும், மனைவியும்
மதிக்கவில்லை.

● பயங்கர சிறைவாசத்தையும் ஸ்வர்க்கப்பதவியாக ஏற்கிறன்.

● பாட்டுப்பித்துக்கொண்டானே யன்றி கடமைகளைக் கைவிடவில்லை.

● மாசுற்றவர்களையும், மாசற்றவர்களாக மாற்றும் விதம் தன் சங்கீதத்தை உப யோகப்படுத்துகிறன்.

● அவன் சங்கீதத்தின் திறமையும், பக்தியின் பெ ருமையும் இவ்வுலகத்தையே பிரமிக்கச்செய்கின்றன.

ஷ காயகனின் களிப்பில் நீங்களும் கலந்துகொள்ளுங்கள்.

74

ஜூன்
1940

உணர்ச்சி வெள்

[முடிவு]

# "மோகினி"யின் அன்பர்களுக்கு

## ஒரு விண்ணப்பம்

அன்பர்களே !

தற்போது நடக்கும் யுத்த பயங்கரத்தின் வேகம் எவ்வாறிருக்கிறதென்பது நயர்களறிந்த விஷயமாகும். பத்திரிகைக்கு முக்கிய ஜீவனாகிய காகிதம் கிடைப்பது துர்லபமாயிருக்கிறது. அப்படிக் கிடைப்பதிலும் சில காகிதம் நன்றாக இல்லை யெனினும் விலை மட்டும் ஒன்றுக்கு நான்குக்குமேலாகிறதை அன்பர்கள் அறிய வேண்டும். 'பல துளி பெரும் வெள்ளம்' என்பதுபோல் நமது மோகினியின்பால் ன்புகொண்டுள்ள ஒவ்வொருவரும் காலதேச வர்த்தமானங்களை யனுசரித்து தம் ் சினேகிதர்களுக்கும், உறவினர்களுக்கும் சிபார்சு செய்து மோகினியின் சந்தா ர்களாகச் சேர்த்து உதவுவீர்களானால் நாம் மிகமிக வந்தனத்துடன் நன்றி த்தக் கடமைப்பட்டிருப்பதோடு, காலநிலையின் கஷ்டத்தையும் ஜெயிக்கலாம். பர்கள் போராதரவு காட்டுவார்களென்று நம்பி எதிர்பார்க்கிறேன்.

பல நேயர்கள் நம் மோகினியை மாதம் இருமுறையாக ஏன் வெளியிடக்கூடா ன்று கேட்கிறார்கள். மேற்குறித்த விஷயமே அதற்குக் காரணமாகும். உலக மை அறிந்தும் பெரிய போக்கில் கால்வைப்பது ஆபத்தல்லவா? அதனால் அந்த யற்சியே எடுத்துக்கொள்ளவில்லை. தேசத்திற்கு நற்காலம் பிறந்து, ஜெயமும் மைதியும் சாந்தியும் நிலவி, சுபீக்ஷம் உண்டாகியபிறகு மேற்படி அன்பர்களின் பிரியப்படி செய்ய முயற்சிக்கலாம்.

## ஜூன் 25-ந் தேதிக்குள்

சேரும் சந்தாநேயர்களுடைய நம்பர்களைக் குலுக்கிப்போட்டு, 6 சீட்டுகளெடுத்து அவற்றிற்கு மேமீ இதழில் கண்டபடி புத்தகங்கள் பரிசாகக் கொடுக்கப்படும்.

## சந்தாநேயர்களுக்கு ஒரு அபூர்வ சந்தர்ப்பம்

உடனே முந்துங்கள். எத்தனை புதிய சந்தாதாரர்களைச் சேர்த்தனுப்பு கிறீர்களோ அத்தனை எட்டணா விலையுள்ள நாவல்களை இனாமாகக் கொடுப்பதுடன் உங்களுடைய நம்பர்களும் சீட்டுக் குலுக்குவதில் சேர்த்துக்கொள்ளப்படும். பணம் அனுப்புகையில் வேண்டிய நாவல்களின் பெயரைத் தெரிவித்து, 8 அணா நாவலுக்கு உள்நாட்டினர் 1 அணாவும், வெளிநாட்டினர் $1\frac{1}{2}$ அணாவும் தபாற் செலவுக்காகச் சேர்த்தனுப்பவும்.

மானேஜர்.

---

குறைந்த விலை | **அரிய சந்தர்ப்பம்** | கொஞ்சம் பிரதிகள்தான்

அடியிற் கண்ட நாவல்கள் மாத்திரம் சஞ்சிகை ரூபமாகக் கொஞ்சம் பிரதிகளே கைவசமிருப்பதால், வேண்டிய அன்பர்கள் உடனே முன் பணம் அனுப்பிப் பெற்றுக்கொள்ளவும்.

| சஞ்சிகை விலை. | தனிநாவல் விலை. | | | சஞ்சிகை விலை. | தனிநாவல் விலை. |
|---|---|---|---|---|---|
| 0 10 | 1 4 | ஆனந்தஸாகர் | ரூ. | 0 4 | 0 8 |
| [illegible] | 1 4 | மாலதி | | 0 4 | 0 8 |
| | 1 0 | படகோட்டி | | 0 4 | 0 8 |

# சுமங்கலி

a B.N.REDDI · RAMNOTH · SEKAR production

2-DEC 1940
MADRAS

திரைப்பட மகுடம் சூடவரும்
வாஹினியின் உன்னத சித்திரம்

**31-5-40 முதல்**

ஆந்திர தேசமெங்கும்

விஜயம் செய்கிறாள்

**மதராஸ் பாரகன் டாக்கீஸில்**

சிக்கிரமே எதிர்பாருங்கள்.



1-6-40

ஸ்ரீராமஜெயம்.

# ஜகன்மோகினி

ஐயுணர் வெய்தியக் கண்ணும் பயமின்றே
மெய்யுணர் வில்லா தவர்க்கு. —திருவள்ளுவர்.

ஜகன்மோ கினியென்னுஞ் சஞ்சிகையைக் காக்க
ஜகன்மோ கினி! மனத்தைச் சார்ந்து. —ஸ்ரீ வீரராகவ கவி.


| மலர் 17 | விக்ரம ஷு வைகாசி மீ ஜூன் 1940 | இதழ் 6 |
|---|---|---|


இராகம் : ஹம்ஸப்ரமரீ. தாளம் - ஆதி.

பல்லவி

ஒருவனென்றறி மனமே! அவன்
திருவடி துணைவருமே துயரறுமே. (ஒ)

அநுபல்லவி

கருமுகில் வண்ணனைக் கருத்தினில் நினைந்திடில்
பெரும்வினை நீங்கிடும் பேரின்பம் தேங்கிடும். (ஒ)

சரணம்

பெற்ற வன்னையைப் போன்று பேணிவளர்த்துப்பின்னும்
உற்ற துணைபுரிந்து ஊழ்வினையைக் களைந்து
குற்றங் குறைபொறுத்துக் குணவமுதூட்டி என்றும்
வற்றிடா வன்புகொண்டு வாழ்த்திடும் கோதாநாதன். (ஒ)

ஷை கீர்த்தனையினுடைய ஸ்வரத்திற்கு உள்ளே 12-வது பக்கம் பார்க்கவும்.

## முக்கிய அறிவிப்பு

1. ஏற்கெனவே வெளிவந்ததோ, ஒருவருடைய காப்பிரைட்டை பாதிக்கக்கூடியதோ, தனித்த நபர்களை பாதிக்கக் கூடியதோ, அல்லது ஆக்ஷேபகரமான விஷயங்களோ முதலியன இல்லாது சுத்தமான கற்பனையில், சிறந்த கருத்துக்களைக்கொண்ட சிறுகதை, சட்டுரைகள் முதலியன நம் சந்தாநேயர்கள் அனுப்பினல், திருப்திகரமாக விருப்பதைப் பிரசுரிக்க ஆக்ஷேபனையே யில்லை.

2. ஷை அறிவிப்புக்கு மாறாக யாராவது, பிறர் எழுதியுள்ளதை மொழிபெயர்த்தோ, தழுவியோ, அல்லது காபிரைட்டை பாதித்தோ நமக்கு எழுதியனுப்பி நாம் அதை யறியாது பிரசுரித்தால், எழுத்தாளரின் ஷை குறைகளுக்கோ, குற்றங்களுக்கோ, நாம் ஜவாப்தாரியல்ல.

—பத்திராதிபர்.

183042

# மனமிரங்கக் கூடாதா!

ஒவ்வொருவரும் தம்தம் வியாதி குணமடைவதற்காகவும், ஆயுர் ஆரோக்கியத்திற்காகவும் தம் சக்திக்கு மீறிய விலையுயர்ந்த மருந்துகளை வாங்கிச் சாப்பிட்டும், அதற்கான ஆகாராதிகளை உபயோகித்தும் வருகிறார்கள். பிராணன் எத்தனை முக்கியமோ, அதேபோல் மானமும் அதைவிட முக்கியமல்லவா! 'மானத்தைக் காக்க எந்த ஆடையை உடுத்தினால் என்ன?' என்ற கேள்வியை சிலர் கிளப்பலாம். ஒரே காரியத்தில் பல நன்மைகள் இருப்பதை நம் பாரதநாட்டின் பெரிய தலைவர்களெல்லாம் ஆதாரத்துடன் எடுத்துக்காட்டிக் கதரின் மகிமையையும் விளக்கியிருக்கையில் அதில் சிக்கனம் பிடிக்கவும் குறை கூறவும் முடியுமா? மானத்தைக் காக்க மட்டும் ஆடையணிவதில்லாமல் தேசத்தின் க்ஷேமத்தைக் காக்கும் பாக்கியமும் நமக்கு ஏற்படுவதை மறக்கலாமா! செல்வம் தேங்கிக் கிடந்த நம் நாட்டில் தரித்திரம் தேங்கிக்கிடக்க இடம் விடலாமா! நம் தேசத்தின் உற்பத்திப் பொருளை நாமெல்லோரும் கங்கணங் கட்டிக்கொண்டு வாங்கி ஆதரித்தால் அதிகமான விலைக்கு விற்கும் கதரும் நாளடைவில் விலை குறைந்துவிடுமல்லவா? விலை அதிகம், அதிகம் என்ற பல்லவியை நாம் பாடிக்கொண்டே இருந்தால் கதர் விருத்தியாவது எப்படி? வேலைக்குத் தகுந்த கூலியும், உழைப்புக்குத் தக்க விலையும் சகஜமில்லையா! கையினால் அரைக்கும் மாவுக்கு நாம் பிரத்தியக்ஷமாக அதிக கூலி கொடுக்கவில்லையா! நெல்லுக்கும் கைக்குத்தலுக்காக அதிக கூலி கொடுக்கவில்லையா! அதையே மெஷினில் அரைத்தால்-குத்தினால்-சத்தும் குறைந்து, பதமும் கெட்டு நம் கைக்கு வருகிறது. குறைந்த கூலியின் சந்தோஷத்தில் முக்கியமான சத்தையும் துறந்துவிடுகிறோம். கூலி காலணா கூடக் கொடுத்தாலும் சத்தின் உபயோகத்தினால் உண்டாகும் நன்மையை மறக்கலாமா! அதேபோல் நம் தேச ஏழை மக்களின் கால் வயிற்றுக் கஞ்சியையும், நம் தேசத்தின் க்ஷேமத்தையும், நாம் முக்கியமாகக் கருதினால் சக்திக்கு மீறி வைத்தியம் செய்துகொள்வதை மனத்தில் நினைத்துக்கொள்வதைப் போன்ற சகஜ மனோபாவம் இதற்கும் ஏற்பட்டுவிடும்.

முக்யமாக, சகோதரிகள்தான் இத்தொண்டில் முனையவேண்டும். அவர்களுடைய சேலைக்குத்தான் அதிக விலை ஏறுகிறது. ஒவ்வொருசகோதரியும் தம்தம் தேவைக்குப் போதுமான உடைகளுக்குச் சுத்தமான கதரையே உபயோகிப்பார்களானால் ஸ்ரீமத் ராமாயணத்தில் சேதுபந்தனத்தின்போது கேவலம் ஓர் அணிற்பிள்ளை காட்டிய அன்பும் தியாகமும்போல் நாமும் நம் தாய் நாட்டிற்காக ஒரு அணுப்ரமாணமான சேவை செய்தோம் என்கிற திருப்தி உண்டாகுமல்லவா? 10 புடவைகள் வாங்கிக் கட்டுவதை நிறுத்தி நல்ல சுத்தமானதும் அழகானதும், மிகவும் மெல்லியதானதுமான கதரில் 4 சேலைகள் கட்டினால் ஆறு பட்டுச் சேலைகளை விலக்கிய தியாகமும் தேச சேவை செய்த பெருமையும், ஏழைகளுக்குக் கஞ்சிவார்த்த புண்ணியமும், காற்று எப்படி உருவம் தெரியாது மக்களை மகிழ்விக்கின்றதோ அப்படி மேற்படி விஷயங்கள் நம்மைச் சூழ்ந்து மகிழ்விக்கும். தேசத்தின் இந்த நெருக்கடியான சமயத்தில் நாம் ஒருமனப்பட்டு ப்ரதிக்ஞையுடன் கதரையே ஆதரிப்பதைத்தவிர வேறு புனிதமான சேவை எதுவுமில்லை. ஆனால் இல்லாமலுமில்லை. அததற்குரியவர்கள் அவைகளைக் கவனிப்பார்கள். முக்யமாக ஸ்திரீ சமூகத்தினர் கட்டுப்பாடாகக் கதர் அபிவிருத்தியில் அதிக ஊக்கமும் ச்ரத்தையும், ஆதரவும் காட்டினோமேயானால், கதருக்காகவே சேவை

செய்யும் "சூடி நூல்" என்கிற பத்திரிகையின் அடுத்த ஆண்டு புள்ளிவிவரங்களில் இன்னும் உயர்ந்த ஸ்தானத்தைக் காணலாம். அதிலும் சேலை விஷயத்தில் ஆயிரக்கணக்கான அபிவ்ருத்தியை நாம் காணும்போது நமது உள்ளம் எவ்வளவு சந்தோஷமடையாது ?

அகில பாரத சர்க்கா சங்கம் தமிழ் நாட்டுக்கிளையின் 1939-ம் ஆண்டு அறிக்கையிலுள்ள புள்ளி விவரங்களைப் பார்க்கும்போது மொத்தத்தில் கதர் அதிகமாகியிருப்பதுபற்றி சந்தோஷப்பட வேண்டுமேயன்றி தனித் தனிப் பார்த்தால் முக்கியமாக சேலை விஷயத்தில் ஆதரவுபோதவே இல்லை என்பது தெரிகிறது. இந்த குறையை நம் சகோதரிகள் நிவர்த்திசெய்வார்களென்று நம்புகிறேன்.

---

# க்ஷேமலாபங்கள்

அகில மளந்த அச்சுதனின் கிருபையால் "உணர்ச்சி வெள்ளம்" இவ்விதமுடன் பூர்த்தியாகிவிட்டது. அடுத்த இதழில் ஆண்டவனின் அருள் பெற்று உங்கள் ஆதரவைக் கோரி, 'சந்தோஷ மலர்' என்கிற நாவலை நம் மோகினிச் செல்வி தாங்கிவரப்போகிறாள். அன்பர்களின் ஆதரவு என்றும் போல் பெருகவேண்டுமாய்க் கோருகிறேன்.

உணர்ச்சி வெள்ளம் முடிவதற்கு முன்பே அதைப்பற்றிப் பல அன்பர்கள் தமது பாராட்டுதலைப் பலவிதமாக எழுதியதற்கு நான் மிகவும் நன்றி யறிதலுடன் கூடிய வந்தனத்தைச் செலுத்துகிறேன். இச் சமயம் ஒரு விஷயத்தைச் சந்தோஷத்துடன் கூற விரும்புகிறேன். சென்றவாண்டில் சில சினேகிதைகளுடன் சம்பாஷிக்கையில் ஒரு சினேகிதை "உணர்ச்சி வெள்ளம்" என்ற பெயரைக் கொடுத்துவிட்டாயே ! எந்த உணர்ச்சியை வெள்ளமாகக் கொட்டப்போகிறாய் ?" என்று சற்று துடுக்காகக்கேட்டாள். அதற்கு மற்றொருத்தி "இதைக் கேட்கவேண்டுமா! வேறு என்ன உணர்ச்சி இருக்கிறது ? "காதல் தான்" என்று வெடுக்கென்று சொன்னாள். அதற்கு வேறொருத்தி "அதில்லாவிட்டால் கதை ஏது ? காதலில்லாது ஒரு முழுக்கதை உண்டாக்க முடியவேமுடியாது." என்று குற்றலாகக் கூறினாள். எல்லாவற்றையும் கேட்டுக்கொண்டேன். "காதலில்லாது கதை எழுத முடியாது என்கிறீர்களா ! அல்லது காதல் இல்லாவிட்டால் ருசிக்காது. படிக்கவேமுடியாது என்பது உங்கள் அபிப்பிராயமா ?" என்று கேட்டேன். அதற்கவர்கள், "எழுதவும் முடியாது, படிக்கவும் முடியாது" என்று ஒரு முகமாகக் கூறினார்கள். "இரண்டும் முடியும் என்பதற்காகவாவது வீம்புக்குப் பந்தயம் வைத்து எழுதட்டுமா !" என்றேன். விளையாட்டாக சற்றுக் கேலி செய்தார்கள். பிறகு விளையாட்டே பந்தயமாயிற்று. அந்த ஒரு வீம்புக்காகவே இந்த கதையில் காதல் என்கிற பதங்கூட வாராமல் எழுதவேண்டுமென்றே எழுதியிருக்கிறேன். ஒரு வேளை என்னை யறியாது அந்த பதம் எங்கேனும் விழுந்திருக்குமோ எனக்குத் தெரியாது. இந்த போட்டியில் எழுதிய கதை எம்மட்டும் வெற்றி யடைந்திருக்கிறது என்பதை நீங்களே கூறுங்கள். அந்த பொறுப்பு உங்களுடையதேயாகும். இது விஷயமாக நமக்கு வரும் பாராட்டுக் கடிதங்களிலிருந்து என் சினேகிதைகளிடம் நான் ஒருவாறு ஜெயித்ததாகவே நினைத்து சந்தோஷமடைகிறேன். எல்லாம் அவன் செயல்.

# வனிதா மண்டலம்

வை. மு. கோ.

மங்களம் : வா! வா! உட்காரு. அன்று நாம் பேசிக்கொண்டிருந்த படி நாமே செய்துவிட்டோம் பார்த்தாயா! திடீரென்று நினைத்துக்கொண்டு நீயும் கிளம்பிவிட்டாயே!

கல்யாணி : மங்களம்! எத்தனைதரந்தான் நான் அதை நினைத்தேன் தெரியுமா? இதே ஸ்ரீரங்கத்திற்குப் போவதற்கு நான் பலமுறை பிரயத்தனம் செய்தும் முடியவில்லை. என் சிறிய தகப்பனார் ரயில்வேயில் வேலையாயிருப்பதால் "பாஸ் இருக்கிறது. வருகிறாயா?" என்று சித்தி கேட்டாள். ஏதோ, என் நல்லகாலம் என் பர்த்தாவும் உத்திரவு கொடுத்துவிட்டார். உடனே கிளம்பி ஸ்ரீரங்கநாதனையும் சேவித்தேன். நீ அன்று சொல்லிய கிளி மண்டபத்தையும் பார்த்தேன். எனக்குச் சிரிப்பா வந்தது. என் பாவத்தையும் கிளிகளுடன் சொல்லலாமாவென்று நினைத்தேன்...சரி. அதிருக்கட்டும்; நீகூட வட இந்தியாவுக்குப் போயிருந்தாயாமே...என்ன விசேஷம்?...அந்த ஊரில் என்னென்ன அதிசயம்? அதைச் சொல்லேன் கேட்கலாம்.

ம: அடேயப்பா! என்ன அவசரம்?...உன்னிடம் சொல்லாமல் வேறு யாரிடம் சொல்வேன்? அக்கால அதிசயம் இக்கால அலக்ஷியத்தில் அதுவும் சேர்ந்ததில்லையா?...

க: அடடா! இப்பதான் நினைவு வருகிறது. வக்கீல் வாசுதேவ ஐயர் வீட்டுப் பெண் ஸரோஜா ஹானர்ஸ் பரீக்ஷையில் முதல் வகுப்பில் பாஸ் செய்தாளாம். அதற்காக நேற்று சாயங்காலம் சந்தோஷக்கொண்டாட்டம் நடத்தினார்கள். டீபார்டியாம். அவா மெத்தையிலேயே செய்தார்கள். என்ன ஆச்சரியம்! புருஷர்களும் பெண்களும் ஒன்றாக உட்கார்ந்து சாப்பிட்டார்கள். எனக்கு மிகவும் அதிசயமாயிருந்தது.

ம: நீ வெறும் சுத்த பயித்தியம். அன்று நான் சொல்லவில்லையா! இக்காலத்தில் இதுவா ஒரு அதிசயம்! முன்காலத்தில் புருஷர்களின் எதிரில்—அதிலும் அயல் புருஷர்களின் எதிரில்—தாராளமாக வருவதற்கே பயம் கொன்றுவிடும். கைகால்கள் நடுங்கும். அதிலும் பெரிய போஜன பந்தியில் பரிமாறும்போது எதைக் கீழே போட்டுவிடுவோமே என்று மனத்தில் திக்கு திக்கு என்று அடித்துக்கொள்ளும், இந்த பயத்தினால் சிலர் கீழே போட்டுச் 'சிரித்தார் முன் இடறி விழுந்தார்ப்'போல் நிற்பதும் உண்டு. கல்யாணப்பந்தலில் ஆலத்தி எடுத்து மங்களம் பாடத்தைரியம் உண்டா! குரலில் நடுக்கமும், கையில் குலைப்பும். மூச்சுத் திணறலும் சொல்லமுடியாது. ஆனால் இத்தனை சம்பிரமத்தில் நலங்கு, ஊஞ்சல் முதலியவைகளில் மட்டும் புருஷர்களின் எதிரில் சிலர் தைரியமாகப் பாடுவதும் உண்டு. மற்றபடி வீட்டுப் புருஷர்கள் எதிரில் சாப்பிடுவதென்றால்கூட பிராணனே போய்விடும். அத்தனை அவமானப்பட்டுத் தவிப்பார்கள்.

க: தவிப்பார்கள் என்று ஏன் சொல்லுகிறாய்? நான் புக்ககம் வந்த புதிசில் என் புருஷன் எதிரில் தண்ணீர் குடிப்பதற்குக்கூட வெட்கம்; தலை போய்விடும். சில சமயம் ஏதாவது தின்பண்டத்தைக் கொடுத்து என்னைச்

சாப்பிடும்படி அவர் கட்டாயப்படுத்துவார். நான் மறுப்பேன். இது விஷயமாகச்—சண்டைகூட வந்துவிடும். இரண்டு மூன்று நாள் பேசமாட்டார்.

ம: அப்பிடி சொல்லு. இந்த ரகஸியம் அநேக பெண்களின் வாழ்க்கையில் இருக்குமென்பதுதான் எனது தீர்மானம். ஓட்டல்களில் சாப்பிடுவது ஆசாரக் குறைவு என்றதால் அதில் சாப்பிடவே பெரியவர்கள் ஒப்பமாட்டார்கள். என் கணவர் சற்று அதற்கு மீறியவர்; ஆனால் வீட்டில் பெரியவர்களுக்குத் தெரியாமல் பாதாம் ஹல்வா, ஜிலேபி முதலியனவற்றை ஆபீஸிலிருந்து ரகஸ்யமாக வாங்கி வருவார். இரவு அதை வெகு ரகஸ்யமாகக் கொடுத்துச் சாப்பிடும்படி கட்டாயப்படுத்துவார். நீ சொல்லியபடிதான் மௌன யுத்தம் நடக்கும். ஒரு சமயம் கோபம் வந்து அதை வீசி சாக்கடையில்கூட எறிந்தார். அதற்காக் ஒரு வாரம் பேச்சு வார்த்தையே இல்லை. அவைகளை இப்போது நினைத்தால் எனக்கே வெட்கமாயிருக்கிறது. இப்போது அதே மனுஷிகளாகிய நாம் என்னமாக நடக்கிறோம்? அவருடைய இலையிலிருப்பதையும் பிடுங்கித் தின்கிறோமல்லவா...!

க: என்ன மங்களம்! பார்த்தார்போல் கேலி பண்ணுகிறாயே! நாம் அந்தகாலத்தில் அசடுகளாக வாழ்ந்தோம்...லீவுநாட்களில் அவர் வீட்டிலிருந்தால் பகல் வேளையில் அவருடன் ஒரு வார்த்தை பேசியறிவோமா? 'யார் பார்த்துவிடுவார்களோ! என்ன கேலி பண்ணுவார்களோ!' என்று நாம் பயந்து செத்தோமே...இந்த காலத்தில் பாரு. கல்யாணமாவதற்கு முன்பே புருஷனுடன் தாராளமாகப் பேசவும் தனியாக ஊர் சுற்றவும் கிளம்பி விடுகிறார்கள்.

ம: அப்படித்தான் எல்லாம். காலம் போகிற போக்கில் இந்த மாறுதல்கள் தாமாக சுழன்றுகொண்டு போகின்றன. டீபார்டியில் சாப்பிடுவதும் டின்னர் பார்டியில் சாப்பிடுவதும் வெகு சகஜமாகிவிட்டது. சங்கோஜம் என்பது தானாகவே மலையேறிவிட்டது. கூச்சம், சங்கோஜம், இவையெல்லாம் காலத்தை யொட்டி பழக்க வழக்கத்திலிருக்கிறது. முன் காலத்தில் பெண் குழந்தைகளானாலும் ஆண் குழந்தைகளானாலும் முழு பாவாடை, முழு துணி உடுத்துவது வழக்கம். குழந்தைகளாயினும் காற்றில் கொஞ்சம் துணி விலகினாலும் பெரியவர்களைப்போல் கூச்சப்பட்டு இழுத்துக்கொள்வார்கள். தூக்கத்திலும் துணி புரளாதபடி பெரியவர்களும் கவனித்துக்கொள்வார்கள். குழந்தைகளே ஜாக்கிரதையாக இருப்பார்கள். கூச்சம் அவர்களை விட்டுப் போகாதிருந்தது. இக்காலத்தில் பாரு. பெண் குழந்தைகளுக்கு முழங்காலுக்கு மேலேயே அரை தொடைவரையில் ஒரு கவுனையும், ஆண் குழந்தைகளுக்கு அரை நிஜாரையும் மாட்டி கையே இல்லாது ஒரு சொக்காயைப் போட்டுவிட்டால் முக்கியமாகப் பெண் குழந்தைகளுக்கு லஜ்ஜையும் கூச்சமும் எப்படி உண்டாகும்? வீதியில் சற்றும் லஜ்ஜையில்லாது நடக்கும் தைரியம் பிறந்துவிடுகிறது.

க: அதுமட்டுமில்லையே! சில தாய்மார்கள் தம் பெண்களுக்கு உசிரே இல்லாத ஓர் மெல்லிய புடவையை உடுத்திப் பகிரங்கமாகவும் தாராளமாகவும், சபாக்கள், சினிமாக்கள், கடைகள், கல்யாண வீடுகள், கிளப்புகள் முதலிய இடங்களுக்கு வெகு உத்ஸாகமாக அழைத்து வந்துவிடுகிறார்கள். அவற்றிற்கு லஜ்ஜையையும், மானத்தையும், அடக்கத்தையும் ஊட்டிவளர்க்க வேண்டிய தாயாரே இம்மாதிரி செய்தால் பெண்களுக்கு மேற்குறித்த

வைகள் எப்படி உண்டாகும்? உடம்பெல்லாம் தெரிந்துகொண்டு காட்சி யளிக்கும் பெண்களைப்பார்த்தால் இரண்டு அறை விட்டுத் தாதாவென்று இழுத்துக்கொண்டுவந்து, நல்ல அழுத்தமான உடையை உடுத்தி அடக்க மாக விருக்கும்படிச் சொல்லலாம்போல் தோன்றுகிறது.

ம: அந்த காலத்தில் இம்மாதிரி எக்ஸிபிஷன் செய்யும் துணிகளும் இல்லாமல் இல்லை. ஆனால் அதை எந்த குடும்பத் தாய்மாரும் வாங்கித் தம் பெண்களுக்கு அணிவித்து வேடிக்கை பார்க்கமாட்டார்கள். இக்காலத்தில் தான் அந்த அநியாயம் அதிகரித்து வருகிறது. உயிருக்குச் சமானமான உடை விஷயத்திலேயே லஜ்ஜை இறந்துவிட்டதென்றால் ஆடவருடன் உட் கார்ந்து சாப்பிடுவதுதானா ஒரு பெரிய அதிசயம்? சில பெண்கள் 18 முழமும் 16 முழமும் உடுத்தும் காலம் மாறி 10, 12 முழங்கள் உடுக்க வாரம்பித்து விட்டார்கள். அதைக்கூட நாம் குறைகூறவில்லை. முழமும் குறைந்து உடையும் கேவலம் எக்ஸிபிஷன் உடையாக விருந்தால் எப்படியிருக்கும் நீயே சொல்லு. இதை முக்கியமாகத் தாய்மார்கள்தான் கவனிக்கவேண்டும்.

க: தாய்மார்களாவது, பாட்டிமார்களாவது? கல்யாணத்திற்கு எடுக்கும் ஜவுளிகளே இந்த மோஸ்தரில் வந்துவிட்டதே. நேற்று ஜவுளிக்கடைக்குப் போயிருந்தேன். 'கூரைப்புடவைக்குமட்டும் ஏதோ பழய சம்பிரதாயமாகவும் 9 கெஜமும் இருக்கட்டும். அது மட்டப் புடவை போதும். மீதி எல்லாம் 5, 6 கெஜம் உள்ள பேஷன் சேலைகள் எடுங்கள்'' என்று பிள்ளையைப் பெற்ற புண்யவதியே கூறினாள். நான் கண்ணால் பார்த்தேன்.

ம: இருக்கட்டும்...5, 6...வேண்டுமானால் 4 கூட வாங்கட்டும். நல்ல பேஷனாகவும் தினுஸு தினுஸாகவும் வாங்கட்டும். ஆனால் அழுத்தமான உடையாய் உடம்பு தெரியாமல் இருந்தால்போதுமே! 'இம்மாதிரி பேமானி துணிகளை ஏன் போடுகிறீர்கள்.?' என்று நான் ஒரு கடைக்காரரையே கேட்டுவிட்டேன். ''இதைத்தானேம்மா பெரிய மனுஷர் முதல் ஏழை வரையில் விரும்புகிறார்கள். நாங்கள் வியாபாரத்தைத் தானே கவனிப் போம்'' என்றார். உடனே நான் "ஏன் சார்! இந்தமாதிரி சேலையை உங்கள் வீட்டுப் பெணகளுக்குக் கொடுப்பீர்களா? என்று தைரியமாகக் கேட்டேன். அதற்கந்த மனிதன் வெறுப்புடன் பேசத் தொடங்கி ''கையை ஒடித்துவிட மாட்டோமா? எங்க வீடுகளில் இம்மாதிரி சேலைகளைக் கண்ணாலும் பார்க்க மாட்டார்கள்'' என்றார். எப்படி இருக்கிறது. உலகம் பாரு.

க: டீ பார்ட்டியில் அப்படித்தான் பலர் உடை யணிந்துகொண்டு வெகு தைரியமாய் வந்திருந்தார்கள். ஒவ்வொருவர் தலையிலும் புஷ்பங்கள் ஒரே நந்தவனம்போல் இருந்தது.

ம: அது கண்ணுக்கு ஆனந்தமாயிருக்கிறது. முக்காலத்தில் தினம் புஷ்பம் வைத்துக்கொள்வது அனேகமாய் கிடையாதென்றே சொல்லலாம். வெள்ளிக்கிழமை, பண்டிகைகள், கல்யாணம், கார்த்தி, உற்சவம் முதலிய விசேஷங்களுக்குத்தான் புஷ்பத்தைப் பார்க்கலாம். தினப்படியில் வைத்து அழகு பார்க்கும் வழக்கம் இப்போது நன்றாக உண்டாகிவிட்டது. அப் போது நாங்கள் சிறியவர்களாகவிருக்கையில் அலங்காரம் செய்துகொள் ளவும் புஷ்பம் அணியவும் ஆசைப்பட்டுச் சாவோம். தினம் பண்டிகையும் கல்யாணமும் வராதா என்று எதிர்பார்ப்போம். இதுபோன்ற மாறுதல் களை முழுமனத்துடன் வரவேற்கவேண்டியது அவசியமானதல்லவா!

தினம் அழகாய், அலங்காரமாக நம் குழந்தைகளைப் பார்ப்பது நமக்குப் பேரானந்தமில்லையா !

க: வாஸ்தவந்தான். இதே போலத்தான் பாட்டு விஷயத்தில் முன்பு இருந்தது. பாட்டுக் கற்றுக்கொடுப்பதே அதிசயம் ; பாடுவது பின்னும் அதிசயம். நான் சிறியவயதில் கற்றப்பாட்டை என் வீட்டில் நான் பாடும்போது சில வம்பிகள் "பாட்டைப் பாரு ! பாட்டு, தேவடியாள் வீடுபோல் எப்போதும் பாட்டுங் கூத்தும்" என்று கேலிசெய்தது எனக்கு இப்போதும் ஞாபகமிருக்கிறது. இக்காலத்தில் 4 பிள்ளை பெற்றவர்களும் பெரிய வித்வானிடம் பாட்டுக் கற்கிறார்கள். சிலர் தைரியமாக சபைகளிலும்பாடித் தாமும் இன்பமுற்றுப் பிறரையும் இன்பத்திலாழ்த்துகிறார்கள்.

ம: இம்மாதிரி மாறுதல்கள் முக்கியமானவை யல்லவா ? எத்தனை பேர் சங்கீதத்திற்காக உழைக்கிறார்கள் ? எத்தனைபேர் பட்டம் பெறுகிறார்கள் ? எத்தனைபேர் போட்டிகளில் கலந்துகொண்டு பரிசு பெறுகிறார்கள் ? எத்தனைபேர் அதைப்பற்றி புத்தகங்கள், வியாஸங்கள் எழுதியும், பேசியும் விளக்குகிறார்கள். இவைபோன்ற நல்ல செய்கைகள் அவசியமானதல்லவா ! கடவுள் நமக்குக் கொடுத்திருக்கும் வித்தையை பிரகாசமாகப் பரிமளிக்கச் செய்யாது மங்கவைப்பதில் லாபமென்ன ? அதேபோலத்தான் படிப்பு விஷயமும், இப்போது அபாரமான வெற்றியுடன் முன்னணிக்கு வந்துவிட்டது. விதவைகள் படிப்பது என்று ஆரம்பித்தபோது அடடா ! என்ன அதிசயம் ! எத்தனை வேடிக்கைப் பார்க்கும் மனிதர்கள் ? அதைப் பற்றி வம்புபேசியவர்கள் எத்தனைபேர்கள்—இப்போது பாரு. விதவா விவாகம்கூட தாராளமாகச் செய்யும் பழக்கம் வந்துகொண்டே இருக்கிறது, அக்காலத்தில் விதவைகள் பட்டபாடென்ன ? அவர்களைப் படுத்திய பாடுகளமென்ன ?...இப்போது அவர்கள் இருக்கும் நிலைமை என்ன ? ஒரு சிறிய விதவைப் பெண்ணானாலும் அக்காலத்தில் கல்யாணப் பந்தியிலேயே வரமாட்டாள். இக்காலத்தில் அவர்களே முதல் வெத்திலை பாக்குக் கொடுக்கவும், முன் நின்று பந்தலில் வேலை செய்யவும் ஆரம்பித்துவிட்டார்கள். இப்போது சர்வசகஜமாகிவிட்டது. இதைப்பற்றி இப்போது குசமசவென்று பேசவும் வம்பளக்கவும் முன்போல் அத்தனை இருக்கிறதா! இல்லவே இல்லை. பாலிய விதவைகளை பல முறைகளிலும் பாழாக்குவதைவிட ஒருவிதமான முறையில் அவர்களுக்குச் சீர்திருத்தம் கொடுப்பது அத்யாவச்யமென்று தான் நான் கூறுவேன். இல்லையா !

க: உண்மைதான்...சரிதான். ஏதேதோ பேசிக்கொண்டிருந்து நேரத்தைப் போக்கிவிட்டாயே! உன் பிரயாணத்தைப்பற்றிச் சொல்லவே இல்லையே! அதைச் சொல்லு: எதற்காகப் போயிருந்தாய் ?...

ம: ஒகோ ! அதை மறந்துவிட்டேனென்று நினைக்கிறாயா ! இல்லை... பம்பாய், பூனா முதலிய இடங்களில் நான் கண்டதும், கேட்டதும், அநுபவித்ததும், உணர்ந்ததும் சொல்லுகிறேன்...அதோ பாத்தியா ! பள்ளிக்கூடத்திலிருந்து குழந்தைகள் வந்துவிட்டார்கள். அவர்களுக்கு டிப்பன் கொடுத்து தலைவாரி, முகம் கழுவி, ட்ரஸ் பண்ணி விளையாட அனுப்ப வேண்டும். நேரமாய்விட்டது. நாளை சொல்லுகிறேன். சாப்பாட்டை முடித்துக்கொண்டு வந்துவிடு. என்ன சரிதானா ?

க: இதற்குமேல் அப்பீல் ஏது ? அதோ எங்க வீட்டுக் குழந்தைகளும் தேடிக்கொண்டு வந்துவிட்டார்களே...நான் வருகிறேன்.

# நித்தியானந்தரின் ரேடியோ டயரி



[ V. M. ஸ்ரீநிவாஸன், M. A., B. L. ]

**நித்தியானந்தர்:** நமஸ்காரம் சர்மாஜி! அன்றைக்கு நான் சொல்லியனுப்பியும் ஏன் வரவில்லை? இந்தபராமுகமேனய்யா?

**லாவண்யசர்மா:** சென்ற 16ம் தேதி தானே? ஆபீஸில் வேலை ரொம்பவும் அதிகம். 8-மணிக்கு மேலும் ஆபீஸ்கட்டுகளுடன்தான் திரும்பினேன். அன்று என்ன அப்பேர்ப்பட்ட விசேஷம்?

**நி:** குட்டி விவரமாய் சொல்லவில்லையா? அன்று சங்கீதமயம். திருச்சி நிலைய ஆண்டு விழாவை வெகு விமரிசையாகக் கொண்டாடினார்கள். நிகழ்ச்சிகளை அமைத்திருந்த விதமே மிக அழகாயிருந்தது. கூடுமானவரையில் வெற்றிகரமாகத்தான் நடந்தனவென்று சொல்லவேண்டும்.

**லா:** அதென்ன அவ்வளவு இழுக்கிறீர்? 'கூடுமான வரையில்' என்றால் 'அவ்வளவாக எதிர்பார்த்தபடி இல்லை' என்று அர்த்தமா?

**நி:** ஏன் சார்! மணிக்கணக்கில் பாடுபவர்களை ஒருமணி அல்லது ஒன்றரை மணி பாடச்செய்தாலே வழக்கம்போல உற்சாகத்துடன் திருப்திகரமாகச் கச்சேரி செய்ய சாத்தியப்படுவதில்லையே, அப்படியிருக்கையில் பெரிய 'ஜமா' வுடன் அரைமணி கச்சேரி செய்யச்சொன்னால் நேரம் குறைவாகவிருப்பதுபோலத்தான் கச்சேரியும் குறைந்திருந்தது.

**லா:** ஆனால் நன்றாயில்லை யென்கிறீரா?

**நி:** அப்படியில்லை! முதல்தரமாக 'ஏ ஒன்!' என்று அமையவில்லையென்பதுதான் என் குறையே தவிர, ஆபாஸமாகவோ, ஏமாற்றமாகவோ, கேட்கமுடியாமலோ இருந்ததாக எண்ணவே வேண்டாம். ஆனால் கடபுடா சப்தம் மட்டும் அன்று பூரா ஓயவேயில்லை. ஒருவேளை இயற்கைதேவிக்கு ஷை நிலையத்தார் செய்துள்ள அபார ஏற்பாடுகளைக் கண்டு பொறாமை ஏற்பட்டுவிட்டதோ என்னவோ!

**லா:** இருக்கலாம். அன்றைய நிகழ்ச்சிகளைப்பற்றி சுருக்கமாகச் சொல்லுமே. நேரில் கேட்காவிடினும், அவைகளைப்பற்றின விவரங்களையாவது அறிந்து திருப்திப்படலாமே.

**நி:** மங்களகரமாக "காக்கவேணும். கடவுளே!" என்று காலையில் அங்கப்பன் நாகஸ்வரக் கச்சேரி ஆரம்பமாயிற்று. பகலில் சிறுவர்கள் கச்சேரி பெரியவர்களைப் பிரமிக்கச் செய்தது. 'குறவஞ்சி' என்ற நிகழ்ச்சி விசேஷமாயிருந்தது. கோஷ்டி வாத்திய சங்கீதமும், கோஷ்டிப் பாட்டும் தனிச்சோபையுடன் விளங்கின. மாலையில் சித்தூர் சுப்ரமணியப் பிள்ளை திருப்புகழ் பாடினார். ஸ்வாமிநாதப்பிள்ளை "தீக்ஷிதர் கிருதிகள்" பாடினார். தனது சங்கீத நினைவுகளைப்பற்றி 'புலி' பேசினார். ஒரு நாளைய காலப்போக்கை சங்கீத வர்ணனையாகச் சித்திரித்தார்கள். அன்றிரவு அரியக்

குடி சில பாசுரங்களையும், பட்டம்மாள் பாரதி பாடல்களையும், சுந்தராம் பாள் நந்தனர் சரித்திரக் கீர்த்தனைகளையும், M. S. சுப்பலக்ஷ்மி சிவன் கீர்த்தனைகளையும் பாடினர்கள். ஷை கச்சேரிகளுள் கடைசி ஒன்றுதவிர மற்ற யாவும் எதிர்பார்த்தபடி 'ஏ ஒன்ருக' அமையவில்லை.

லா : ஒருவேளை சிவன் சாகித்தியங்களென்ருல் உமக்கு மிகவும் பிரியம்போலும்...அதிருக்கட்டும். சென்ற ஒரு மாதத்தில் நடந்த நிகழ்ச்சிகளைப் பற்றி உமது குறிப்புகள் எங்கே ? உமது டயரியைப் படித்து பல வாரங்களாகிவிட்டனவே.

நீ: முன்போல இப்போது தினசரிக் குறிப்புகள் எழுதுவதில்லை. என்னல் உபத்திரவம் சகிக்கமுடியவில்லை.

லா: உபத்திரவமா ? யாரால் ?

நீ: போது விடிந்தால் அஸ்தமித்தால் கொட்டாங்கச்சி பிடிலும், இனிமையற்ற 'டொய் டொய்' வீணையும், உயிரற்ற புல்லாங்குழலும், கம்பீரமற்ற நாகஸ்வரமும், ஜீவனற்ற பாட்டும் கேட்டுக் கேட்டு அலுத்துப்போய் விட்டது. எவ்வளவுக்கெவ்வளவு சங்கீதத்தை விரும்புகிருேமோ அவ்வளவுக்கவ்வளவு அதன் பெயரைச் சொல்கையிலேயே பயப்படும்படிச் செய்துவிடுகிருர்கள் ஷை சங்கீதக்காரர்கள்; உதாரணங்கள் சொல்ல ஆரம்பித்தால் ஹனுமார் வால்மாதிரி வளர்ந்துகொண்டே போகும். சென்னை நிலையம் தன் பெயரைக் கெடுத்துக் கொள்வதைப் பார்க்க ஆச்சரியமாயிருக்கிறது. செல்லப்பா அய்யர் பிடில், காரைக்குடி ரங்கநாயகி வீணையும் பாட்டும், சங்கரி மகாலிங்கம் வீணையும் பாட்டும், முதலிய கச்சேரிகளை ஒலி பரப்பியதை நினைத்தாலும் பயமாயிருக்கிறது. ரஸிகர்களைச் சித்திரவதை செய்துவிடுவது என்று தீர்மானித்துத் தான் இம்மாதிரி அடாஸ் கச்சேரிகளை ஒலி பரப்புகிருர்கள்போலும் !

லா: நன்ருயமைந்த கச்சேரிகளைப்பற்றிச் சிறிது கூறுமே.

நீ: செம்பை, மகாராஜபுரம், முசிரி, தேவேந்திரப்பா, ராஜா ஐயங்கார் முதலியவர்களின் பாட்டும்; வெங்கடகிரியப்பா, நீலம்மா கடாம்பி, சுப்பிரமண்ய அய்யர் முதலியவர்களின் வீணையும்; சௌடய்யா, ஜெயராமய்யர், கோவிந்தராஜபிள்ளை, அபிராமசுந்தரி முதலியவர்களின் பிடிலும் சுவாமிநாதபிள்ளை, நாகராஜன், பாலகணேசய்யர் முதலியவர்களின் புல்லாங்குழலும் நன்ருயிருந்தன.

லா : சில நிகழ்ச்சிகளைப்பற்றி நீர் குறிப்பிடுவதேயில்லையே, என் அப்படி ?

நீ : அதிலிருந்தே தெரியவில்லையா அவைகளைப்பற்றி என் அபிப்பிராயம் ?

லா : சென்ற மாதத்தில் நாடகங்கள் எப்படி ?

நீ : அதைப்பற்றித்தான் நானும் சொல்லவிருந்தேன். பொதுவாக சென்னையில் நாடகங்கள் மிகக்குறைவு. 'நடிக்கப்படும்' ஒன்றிரண்டும் திருப்தியாயில்லை. திருச்சியில் கால்மணி நாடகங்கள் யாவும் கூடியவரை ரஸிக்கத்தக்கவையாக விருக்கின்றன. கிராம நாடக சபையால் நடிக்கப்படும் நாடகங்களில் அனேகமாக அதிருப்தியே ஏற்படுவதில்லை ; அவ்வளவு இயற்கையாயும், குறைகளின்றியும் நடிக்கிருர்கள். பெரிய நாடகங்களில் யசோதரா'வைக் குறிப்பிடலாம். ஆனல் அதில் இளவரசனுக்கு வேக

மாகப்படிக்கச் சொல்லிக்கொடுத்திருந்தார்களே தவிர, இயற்கையாகப் படிக்கச் சொல்லித்தரவில்லை. இந்த குறையைத் தவிர மற்றபடி அந்த நாடகம் மிக நன்றாயிருந்தது.

லா : கிராமவாசிகளுக்கான நிகழ்ச்சிகள் எப்படி இருக்கின்றன இப்போது ?

நி ; எப்போதும்போல நன்றாயிருக்கின்றன. பொழுதுபோக்கிற்குப் பெருந்துணையாகவும், ஹாஸ்யரஸத்திற்குப் பேர்போனதாயும் அமைகின்றன. படிப்புவாசனையற்ற கிராமவாசிகள் கேட்பார்களேயாகில் உண்மையில் பயன் பெறுவார்கள்; அவர்களின் அறிவு வளர்ச்சிக்கான பல விஷயங்களை ஷை நிகழ்ச்சிகளில் புகுத்துகிறார்கள். சுப்பன் நடிக்கும் நிகழ்ச்சிகளில் சிரித்து வயிறு புண்ணாகிவிடுகிறது. ஆனால் சுப்பனுக்கு 20 வயது கூட நிரம்பாத அக்கா இருக்கிறாள் என்றால் நம்பமுடியுமா ? அவன் அம்மாவுடன் கொஞ்சுவதை ரஸிக்கமுடியுமா ? அவன் என்ன சிறு குழந்தையா ? அவன் பாட்டு கற்றுக்கொண்டதை நினைத்தால் இப்போதும் சிரிப்பு வருகிறது. நன்கு நடிக்கும் சுப்பனுக்கு நல்ல பாகமாகக் கொடுப்பது உசிதம். குழந்தையாக நடிக்கவேண்டாம்.

லா: கோஷ்டிவாத்திய சங்கீதம் எப்படி ?

நி: இரு நிலயங்களிலும் தினமும் ஷை சங்கீதம் உண்டு. சென்னை நிலய பிடில் வித்வான்கள் மிக நன்றாக வாசிக்கிறார்கள். பொதுவாக கோஷ்டி வாத்திய சங்கீதம் என்று எடுத்துக்கொண்டால் திருச்சியில்தான் நன்றாயிருக்கிறது என்று சொல்லவேண்டும்.

லா: ஸங்கீத அப்பியாசம் எப்படி ?

நி: அதைத்தான் குறைத்துக்கொண்டே வருகிறார்களே. கோடை விடுமுறைக் காலங்களில் தினமும் ஷை அப்பியாசம் இருந்தால் குழந்தைகளுக்குப் பயன்படும்...சொல்ல மறந்துவிட்டேனே. வி. வி. கோபாலரத்னம் அவர்களின் பேச்சும், கரூர் சின்னசாமி ஐயரின் பிடிலும், டி. என். ராஜரத்தினம் பிள்ளையின் நாகஸ்வரமும் 'ஏ ஒன்னாக' இருந்தன.

லா : நான்தான் இவைகளைக் கேட்கும் பாக்கியம் பெறவில்லை.

---


## திருச்சி ரேடியோவில்

**20-6-1940 வியாழக்கிழமை**

மாலை **7** முதல் **7-15** வரையில்

நமது ஆசிரியை:

**ஸ்ரீமதி வை. மு. கோதைநாயகி அம்மாள்,**

"தாளபத்த சங்கீதம்"

"I LIKE MUSIC FOR ITS RYTHMIC VALUE"

என்பதுபற்றிப் பேசுவார்கள்.

# வாணியின் பிரசாதம்

ஸாஹித்தியகர்த்தா : வை. மு. கோதைநாயகி அம்மாள்.

**58-வது மேளகர்த்தா :** **ஹேமவதி.**

ஜன்ய ராகம் : ஹம்ஸ ப்ரமரீ.

ஸ்வரப்படுத்தியவர் : ஸ்ரீ. ஏ. பார்த்தசாரதி.

### ஆரோஹணம்—ஷாடவம்.

| ஸ | ரி | க | ம | ப | த | ஸ் |
|---|---|---|---|---|---|---|
| | சதுர் | சாதாரண | ப்ரதி | | சதுர் | |

### அவரோஹணம்—ஸம்பூர்ணம்.

| ஸ் | நி | த | ப | ம | க | ரி | ஸ |
|---|---|---|---|---|---|---|---|
| | கை | சதுர் | | ப்ரதி | சாதாரண | சதுர் | |

இராகம் : ஹம்ஸ ப்ரமரீ. சதுரஸ்ரஜாதி - த்ரிபுடை - தாளம்.

### பல்லவி

| | | | |
|---|---|---|---|
| 1. | ●பம-, க ரீ ஸாரீ-காமா | பா : - ; ; | ; ; - ப ம பா |
| | ஒரு வனென்றறி ம ன | மே | அ வன் |
| | ●பத-,நிதா-பமகரி-கமபா | தா ; - ; ப த | ஸ்ாநித - பமகரி |
| | திருவடி து ணை வ ரு | மே து | ய ர ரு மே |
| 2. கம | ●பம-,க ரீ- ஸாரீ-காமா | பா ; - ; ; | ; ; - ப ம பா |
| | ஒரு வனென்றறிம ன | மே | அ வன் |
| | ●பத-,நிதா-பமகரி-கமபத | நீ ; - ; ப த | ரிஸநித - பமகரி |
| | திரு வடி து ணை வ ரு | மே து | ய ர ரு மே |
| 3. கம | ●பம-,க ரீ- ஸாரீ-காமா | பா ; - ; ; | ; ; - ப ம பா |
| | ஒரு வனென்றறிம ன | மே | அ வன் |

| | | | |
|---|---|---|---|
| ; ● | பத-,நிதா-பமகரி-கமபத | ஸா ; - ; ஸ த | ரிஸநித - பமகரி |
| | திரு வடி து ணை வ ரு | மே து | ய ர ருமே |
| 4. கம ● | பம-,க ரீ - ஸாரீ-காமா | பா ; - ; ; | ; ; - ப ம பா |
| | ஒரு வனென்றறிம ன | மே | அ வன் |
| ● | பத-,நிதா-பமகரி-கமபத | ஸரிகரி - ஸாரிஸ | நிதநித - பமகரி |
| | திரு வடி து ணை வ ரு | மே து | ய ர ரு மே |
| கம ● | | | |

## அநுபல்லவி

| | | | |
|---|---|---|---|
| 1. ; ● | தஸ-,நிதா-பா,ம-பமகரி | கமபத -, நிதா | ஸநிதநி - தஸரிஸ |
| | கரு முகில்வண் ணனைக் | கருத் தினில் | நி னைந் தி டில் |
| 2. நீ ● | தஸ்-,நிதா-பா,ம-பமகரி | கமபத -, நி தா | ஸநிதநி-தஸ ரீ |
| | கரு முகில்வண் ணனைக் | கருத் தினில் | நி னைந் தி டில் |
| ; ● | கம -,கரி- ஸா,நி-தஸரீ | ; ஸ்ா -, நீ த | பா , ம -பம கரி |
| | பெரும்வினைநீ ங் கி டும் | பே ரின்பம் | தே ங் கி டும் |
| கம ● | | | |

## சரணம்

| | | | |
|---|---|---|---|
| ● | பத-,நிதா-பாமா-பா தா | ; பத - , ஸ ஸா | ஸரி ஸநி-தநிதா |
| | பெற்றவன்னையைபோன்று | பே ணி வ | ளர்த்தி பின்னும் |
| ; ● | நீ - , தபா-பமகா-ரீ ஸா | ; ஸரி - , க மா | பத நித-பமபா |
| | உ ற் றது ணை பு ரிந்து | ஊழ் வி னை | யைக்க ளைந்து |
| ; ● | தஸ்-,நிதா-பாமா-பமகரி | கம பத - , நி தா | ஸநிதநி-த ஸ ரீ |
| | குற்றங்குறைபொருத்து | குண வ மு | தூட்டி என்றும் |
| ; ● | கம-, கரீ-ஸாநீ-த ஸ ரீ | ; ஸ்ா - , நி தா | பா மா - பமகரி |
| | வற்றிடாவன்புகொண்டு | வாழ்த் திடும் | கோதா நா தன் |
| கம ● | | | |

## முக்தாயிஸ்வரம்

| | | | |
|---|---|---|---|
| ● | பா,-பதஸ்நித-ஸ்நித-ஸ்நித | பம - கா ,-ரிஸரி | கம-பதநித - ஸ்ா |
| ; | - பதஸரி- கமகரி-கரிஸ-நீத | பம-ஸநித- பாம | கரி-ஸரிக - ஸாரி |
| கம ● | | | |

சிறுகதை

# ஸ்திரீகள் சங்கம்: பதவிப் பித்து

(ஸ்ரீமதி. K. பொன்னம்மாள், கோபாலபுரம்.)

மங்களபுரியிலுள்ள ஜனங்கள் பார்ப்பதற்குச் சற்று கர்னாடகமாக விருந்தார்கள். ஆனால் உத்தியோகஸ்தர்கள் அந்த ஊரில் நிரம்பியபிறகு அவர்களின் கர்னாடகம் மறைந்து நாகரிகமுறையில் வாழ்க்கை நடத்த வாரம்பித்தார்கள். இத்தகைய அற்புதமாறுதலுக்குக் காரணகர்த்தா ஸ்ரீமதி ப்ரகதாம்பாளே யாவள்.

ப்ரகதாம்பாள் ஓர் கலெக்டரின் மகள், கலெக்டரின் மனைவியாகவும் ஆகிவிட்டாள். கூடிய விரைவிலேயே கலெக்டரின் மாமியாராகவுமாக ஆசை ஊசலாடிக்கொண்டிருக்கிறது. அந்தம்மாளின் புருஷரை அவ்வூருக்குக் கலெக்டராக மாற்றி வருவதற்கு முன்பு அவ்வூரில் சங்கமோ, நாகரிகமோ ஒன்றுமே இல்லை. பட்டிக்காடுமின்றி பட்டணவாஸமுமின்றித் திரிசங்கு ச்வர்க்கமாயிருந்தது. அவள் வந்ததும் சில மாதங்களுக்குள்ளேயே ஒரு ஸ்த்ரீகள் சங்கம் ஸ்தாபிதம் செய்து, உத்தியோகஸ்தர்களின் குடும்பத்திலுள்ள பெண்களை எல்லாம் அங்கத்தினராக்கியதோடு விடாமல் அவ்வூர் வாசிகளில் சிலரையும் இழுத்துவிட்டாள். சங்கம் ஆரம்பிக்கும்போது எங்குமுள்ள ஆச்சரியம், வம்புப்பேச்சு, குசமுசாக்கள், வேடிக்கைப் பார்த்தல் முதலியவைகளுக்குக் குறைவே இல்லை.

ஆனால் ஸ்ரீமதி ப்ரகதாம்பாள் அதை லக்ஷியம் செய்பவளா? சங்கம் ஆரம்பித்தபோது புராதன விளையாட்டுகளான பல்லாங்குழி, சோனல் கட்டம், எட்டுக் கட்டம், தாயகட்டம், கெடியாரக் கட்டம், நாய்ப்புலி, அம்மானை, கிழக்கோடி முதலிய ஆட்டங்களை வலை வீசுவதுபோல் வீசி பாமர ஜனங்களையும் சங்கத்தில் இழுத்துக்கொண்டு பிறகு நவநாகரிகவிளையாட்டுகளாகிய கேரம், பகாடில்லி, பிங்பாங், பேட்மெண்டன், டென்னிஸ் முதலியவற்றையும் இன்னும் பல விளையாட்டுகளையும் ஆரம்பித்தாள்.

மங்களபுரியில் வக்கீலாகவிருக்கும் பெரிய மனிதரின் மனைவியாகிய ஸ்ரீமதி மாலதியம்மாள், இத்தனை நாள் முழுகர்னாடகமாயிருந்தவள், இந்த சங்கத்தில் சேர்ந்த பிறகு மிகவும் புதிய மனுஷியாகியதோடு கையில் பேட்டை எடுத்துக்கொண்டு கம்பீரமாகப் பந்தாடவும் கிளம்பிவிட்ட ஆச்சரியத்தைக் கண்ட ஊர் ஜனங்களுக்கு பெரிய வியப்பாகிவிட்டது.

மாலதியம்மாளின் சாதா எடுத்துக் கட்டு மறைந்து பிச்சோடா வந்தது. ஜாதிக்கட்டாகிய மடிசார் புடவை மறைந்து முன்குசவான் கட்டும், கையே இல்லாத ஜாக்கெட்டும் இதுபோன்ற சில அலங்காரங்களுடன் காக்ஷியளித்தாள். அந்தம்மாளுக்கு சங்கத்தில் தான் தலைமை வகிக்கவேண்டுமென்கிற ஆசை வெகு மும்முரமாக விருந்தது. ஆனால் அந்தப் பதவியை ஸ்ரீமதி ப்ரகதாம்பாள் விடுவதாக இல்லை. வருடக்கொண்டாட்டம் முதலிய விசேஷதினத்திலாவது தான் ஒரு சில மணி நேரம் தலைமை வகித்து மாலையும் போக்கேயுமாய் போட்டோ படத்தில் காட்சி கொடுத்தால் போதும். தன்னுடைய நாகரிக முன்னேற்றத்தைக் கருதி அனேக நாகரீக குடும்பத்தவர்கள் தன்னுடன் சம்மந்தம் செய்யப் போட்டியிடுவார்கள். இப்போது ஜாதகம் பார்த்துக்கொண்டிருக்கும் எஞ்சினியருடைய பிள்ளையாண்டானுக்கு உடனே நிச்சயமாகிவிடும், அதனால் தான் எப்படியும் தலைமைப்

பதவிக்கான முயற்சிசெய்தே ஆகவேண்டும் என்று மாலதி இரவு பகல் யோசனை செய்தாள்.

வருஷக் கொண்டாட்டத்திற்குத் தலைமை வகிக்க அயலாரை அழைப்பதும் அவர்கள் சங்கத்தின் அபிவ்ருத்திக்காக ஏதோ டோனேஷன்கொடுப்பதும் ஓர்வழக்கமாக விருப்பதை மாலதியறிந்துகொண்டாள். தனக்குவேண்டிய ஒருத்தியைப் பிடித்துத் தான் 50 ரூபாய் நன்கொடைகொடுப்பதாயும் தன்னைத் தலைமைப் பதவிக்குத் தேர்ந்தெடுக்கும்படிக்கும் ஏற்பாடுசெய்தாள்.

"ஸ்ரீமதி மாலதியம்மாள் வருஷக்கொண்டாட்டத்திற்குத் தலைமை வகிப்பார் என்றும், 4-30 மணிக்கு புகைப்படம், 5-க்கு சிற்றுண்டி, பிறகு வருஷாந்திர அறிக்கை முதலியன" என்றதுமான நோட்டீஸுடன் அழைப்புகளும் வந்தவுடன் மாலதியின் சரீரம் பின்னும் ஒரு சுற்று உப்பியது.

தினம் வரும் மாலதியா இன்று ? இன்று தலைவியல்லவா ? மாலதி வந்ததும் தலைவி முறையில் வரவேற்பு, மாலை, பொக்கே தடபுடல் நடந்தது. மாலதி வாய் மூடவே இல்லை.

மாலதி விரும்பியது புகைப்படந்தானே. போட்டோக்காரன் "இப்படி அப்படி; தலையை நிமிருங்கள், குனியுங்கள்" என்று சட்டமிடுவதற்கெல்லாம் கட்டுப்பட்டு ஒருவாறு புகைப்பட வேலை நிறைவேறியது.

பிறகு சிற்றுண்டி: அதன்பிறகு சங்கீதம், நடவடிக்கைகள், வருடாந்திர அறிக்கை முதலியன முடிந்ததும் தலைவியின் பேச்சு. தலைமைப் பதவிக்கு ஆசையே யன்றி அப்பதவிக்குத் தகுந்தபடி இரண்டு வார்த்தை பேசுவதற்குத் தெரியுமா ! அது தான் பூஜ்யம். தன் கணவனைக் கேட்டு எழுதி வாங்கி வந்திருந்ததையும் சரியாய்ப்படிக்கத் தெரியாமல் விழித்துத் தடுமாறிக் குளறிக் கொட்டி ஒருவாறு தலைமைப் பிரசங்கத்தை முடித்தாள். ஆனால் அங்குக் கூடியிருந்த எல்லோரும் தம் தம் சொந்த அலுவலாகப் பேசிக்கொண்டும் சிரித்துக்கொண்டுமிருந்ததால் மாலதியின் பிரசங்கத்தை அவளேதான் சந்தோஷித்திருக்கவேண்டும். பிரிவுபசாரத்துடன் கூட்டம் கலைந்தது. மாலதியைக் கைக்குலுக்கி வழியனுப்பினார்கள். கல்யாணப் பெண்ணைப்போல் மாலதி மாலையும் பொக்கேயுமாக சந்தோஷமாய் வீட்டிற்கு வந்தாள். வரும்போதே தான் கொண்டுபோயிருந்த 50 ரூபாய் செக்கைப் பிரகதாம்பாளிடம் கொடுத்துவிட்டாள்.

மணமகளைப்போல் வரும் மனைவியைப் பார்த்ததும் வக்கீலின் மனம் பொங்கியது. 'பேஷ் ! மாலதி ! பலே ஜோராயிருக்கிறாயே, பிரசங்கம் எப்படி ?" என்று விசாரித்தபடியே புதிய ஷோக்கில் வீதியிலேயே கையைக் குலுக்கினார்.

மாலதி:—அதெல்லாம் சரியாகத்தான் நடந்தது. அதிருக்கட்டும். 50 ரூபாய் போனால் போகிறது. நாளைய தினம் புகைப்படத்தைப் பத்திரிகைகளில் கண்டதும் அந்த எஞ்சினீயரின் மனைவி உடனே கடிதம் எழுதிவிடுவாள் பாருங்கள். அவள் தான்தான் நாகரீகம் என்றும், ஸோஷல் லேடீ என்றும் பெருமை பேசினாளே இப்போது என்னசொல்கிறாள் பார்க்கவேண்டும். என்னை கர்நாடகமென்று இனி பழிக்கமாட்டாளல்லவா ?—என்றாள்.

இரண்டு நாள் சென்றதும் வக்கீலுக்கு ஒரு கடிதம் வந்தது.

"அன்புள்ள ஐயா ! நமஸ்காரம்.

தங்கள் தர்மபத்தினியாரின் புகைப்படத்தை பத்திரிகையில் பார்த்தேன். அவர்களுடன் பக்கத்திலேயே தங்கள் அருமைப் புதல்வி பூணூல் போட்டுக்கொள்வதுபோல் புடவையை மேலாக்

குப் போட்டுக்கொண்டு கண்ராவிக் கோலமாயிருப்பதையும் பார்த்தேன். என் தாயாரும் சகோதரியும் அதிக நாசரீகத்தில் திளைவதையே நான் கண்டிக்கிறேன். ஆனால் பயனில்லை. நவ நாகரீகத்தைக் கண்டிப்பதால் நான் முழு கர்னாடகம் என்றும் மடிசஞ்சி என்றும் நினைக்கவேண்டாம். எனக்கு வரப்போகும் மனைவியையாவது போதுமான அளவு நாகரீகத்துடன் அடக்க ஒடுக்கமாகப் பழக்கி படாடோடமில்லாது தேசத்திற்கும் சமூகத் திற்கும் பணி செய்து இன்புறும்படிச் செய்ய எண்ணியே உங்கள் பெண்ணைப் பேசும்போது நான் சம்மதித்தேன். புகைப் படம் என்னைத் தட்டி எழுப்பிவிட்டது. விபரீத நாகரிகத்தை யும், வீண் ஜம்பத்தையும் நான் வெறுக்கிறேன். ஆகையால் என்னை எதிர்பார்க்கவேண்டாம். தங்களுடைய சகோதரியின் மகள் சகுந்தலாவைப் பேசி நிச்சயம் செய்தாயிற்று. நமஸ்காரம்.

ராமமூர்த்தி."

கடிதத்தைப் படித்து இடி விழுந்தவர்போல் வக்கீல் அலறிக்கொண்டே வந்து, "அடீ! மாலதி! வரனும் போச்சு, 50 ரூபாயும் போச்சே" என்று கத்தினர். மாலதியும் ஓடிவந்து கடிதத்தைப் படித்தாள். நின்ற இடத்தி லேயே தலை சுற்றி உட்கார்ந்துவிட்டாள். பதவி ஆசையும் நாகரிக மோக மும், மாப்பிள்ளையைச் சந்தோஷப்படுத்த நினைத்த எண்ணமும் தூள் தூளாகப் பறந்து காற்றில்செல்வதுபோல் மாலதியின் கண்ணில் தெரிந்தன.

# இந்துமத பாடசாலை

## வாலாஜாபாத்

நம் நாட்டின் எந்தெந்த பாகத்தில் என்னென்ன விசேஷமிருக்கிற தென்பதை அறியாமல், வட-துருவத்திலும் தென்-துருவத்திலுமுள்ள விஷயங்களைப்பற்றி ஆராய்ச்சி செய்யப்படும் வழியில் தற்காலப் படிப்பு இருக்கிறது. இதன் பலனாக சென்னைக்கு மிகவும் சமீபத்தில்—தமிழ் நாட்டில் பிற்போக்காகவுள்ளதாகச் சொல்லப்படும் செங்கற்பட்டு ஜில்லா வில்—1916ஆ முதல் இந்த பாடசாலை படிப்படியாக விருத்தியடைந்து வருவதை இதுவரையில் அறிய இயலாமற்போயிற்று. குருகுலவாசம் இருந்த இடம் தெரியாமல்போயுள்ள இக்காலத்தில், பல வகுப்பினரையும் ஒன்று சேர்த்து அவர்களுக்குப் புத்தகப் படிப்பு மாத்திரமின்றி நூல் நூற்றல், நெய்தல், தச்சு வேலை, வேளாண்மை முதலிய தொழிற் கல்வியும் போதிப் பது அவசியம் போற்றத்தக்கது.

நாஸ்திகம் தலைவிரித்தாடுகையில் கடவுளை வணங்குவது இங்கு முக்ய மாகக் கருதப்படுகிறது. 1916-ல் 44 மாணவர்களுடன் ஆரம்பித்தது தற் போது 700 பேர்களுக்கு மேலாக விருத்தியடைந்துள்ளது. அன்னம், ஆடை இவற்றிற்குப் பிறகு கல்விதானமே முக்யமாதலால் லக்ஷ்மீகடாக்ஷம் பொருந்தியவர்கள் தாராளமாக நன்கொடை ஈந்து இப்பாடசாலையை நன்கு வேலை செய்யும் நிலைமையில் வைக்கவேண்டுவது அத்யாவசமாகும். இப் படிப்பட்ட பாடசாலைகள் ஒவ்வொரு தாலூகாவிலும் ஒன்று இருப்பின், நம் தாய் நாட்டின் அறியாமைப்பிணி அகன்று, அதிலிருந்து வெளிவரும் ஒவ்வொருவரும் நமது சமூகத்திற்கும், தேசத்திற்கும் பணிசெய்யக்கூடிய ஸ்திதியிலிருப்பார்களென்பதில் ஐயமில்லை.

## பொறுமையின் உயர்வு—பொருமையின் மறைவு

வியப்புக் கடலாடினர்கள். ஒருவரையொருவர் பார்த்துக் கொண்டார்கள். இன்பமும் துன்பமும் வியப்பும் ஒன்று கூடிய உணர்ச்சி ததும்ப கண்ணம்மாள் தன் பரிதாபக் கோலத்துடன் ஓடிவந்து, "அக்கா!" என்று கதறியவாறு மதுரத்தைக் கட்டிக்கொண்டாள்.

"மழலைச் சொல் மாருத குழந்தை" என்று வெளிதேசத்தார் கூறும் பிராயமுள்ள கண்ணம்மாளின் கோலத்தைக் கண்டதும் எத்தகைய கல்லுதான் கரையாது? மதுரமும் நாகலக்ஷ்மியும் நெருப்பின்மீது பட்ட புழுவெனத் துடித்தார்கள். சில வினடிகள் மதுரத்திற்கு பிரக்ஞையே யற்றுவிட்டது. பிறகு ஒருவாறு தெளிந்தாள். கிழவியும் சின்னம்மாளும் மேலே கூறியபடி வியப்பதைத் தவிர வேறு என்ன தெரியும்?

மதுரத்தினிடம் அவர்கள் எதும் பேசாது விம்மி விம்மி அழ வாரம்பித்தார்கள். மதுரம் தானுக வலுவில் சென்று "சித்தீ! புலம்பாதே. இனிமேல் அழுது என்ன பயன்! கண்ணம்மாளையும் பாழாக்கிவிடாமல் நல்ல முறையில் பொழுதை போக்க நன்ருகப் படிக்கவையுங்கள். ஏதோ தலைவிதி!"...என்று இரண்டொரு வார்த்தைகள் சொல்லியபடியே, தான் கொண்டுவந்திருந்த புடவைகள், 200 ரூபாய்க்கு 20 பத்து ரூபாய் நோட்டுக்கள், குழந்தைகளுக்குத் தின்பண்டங்கள் எல்லாவற்றையும் சின்னம்மாள் எதிரில் வைத்து "சித்தீ! இந்தா இதை எடுத்துக்கொள்" என்று நயமாகக்கூறினுள்.

கிழவி அப்போதும் தன் துண்டத்தனத்தை விடாமல் "ஐயோ! உலகமே! குப்பை உயரவும் கோபுரம் தாழவும் காலக்கொடுமை வந்து வாய்ச்சுது. ராஜாத்தியாட்டமாயிருந்த காலம் போயி ஒங்கிட்டல்லாம் வாங்கி வயிறு வளர்க்கும் காலம் வந்துடுத்து" என்று கூறி மூக்கைச் சிந்தினுள். தாயைவிட மகளுக்குச் சற்று புத்திதெளிந்திருந்ததால், "அம்மா! நீ பேசாமல் போ!...வீண் வார்த்தை சொல்லாதே. குழந்தை கண்ணம்மாவுக்கு இருக்கும் புத்தி நமக்கில்லை. அவள் சொல்வதுபோல் என் வஞ்சனை என்னை யடித்தது. நீ இன்னும் கிளருதே" என்று தானே வாய்மீது போட்டாள்.

ஆனல் கண்ணம்மாள் அதுவரையில் சும்மாயில்லை. தன்னைப் பெத்த தாயாயினும் நியாய அநியாயத்திற்குக்கட்டுப்பட்டவளாய் "அம்மா!...இந்தா! தாராளமாய் நோட்டுக்களை எண்ணி வை. முன்பு அக்காவுக்கு ஜீவனும்சமாகக் கொடுத்த பணத்தை வாங்கிக் கரைக்க அப்பாவிடம் ஆறுமாதம் சண்டை செய்தாயே! இதோ!

அத்தகைய புண்யவதியாகிய உனக்கு அக்கா தன் கையால் உழைத்துச் சம்பாதித்துக் கொண்டுவந்து தானே கொடுக்கிறாள்; வாங்கிக் கொள். சந்தோஷமாக வாங்கிக்கொள்ளு. இப்போதும் முணு முணுக்காதே" என்று கூறிவிட்டு மதுரத்தையும் நாகலக்ஷ்மியையும் கையைப் பிடித்து இழுத்துக்கொண்டு போய்விட்டாள்.

அவர்களுக்குத் தனித்துச்செல்ல விடுதி ஏது? புறக்கடையிலுள்ள ஒரு மரத்தடியில்தான் கண்ணம்மாள் அநேக சமயங்களில் உட்கார்ந்திருப்பது வழக்கமாதலால் அவ்விடத்திற்கே அழைத்துச் சென்றாள். "அக்கா! மாமீ! என்னஎன்ன கதிக்கு ஆளாகப்போகிறார்களோ தெரியவில்லையே! எனக்கோர் நல்ல மார்க்கத்தைக் கூறி என் துயரத்தைப் போக்குங்கள். எங்கேயோ அனாதை ஆச்ரமம் இருக்கிறதாமே, அதிலாவது என்னைச் சேர்த்துவிட்டால் அனாதைக் குழந்தைகளுக்கு உழைத்து என் ஜென்மத்திற்கு ஒரு இன்பத்தைக் தேடிக்கொள்கிறேன். என்னைக் காப்பீர்களா?" என்று கேட்டுத் தேம்பித் தேம்பியழுதாள்.

மதுரம் அவளைச் சேர்த்துக் கட்டிக்கொண்டு, "கண்ணம்மா! அழாதே! உனக்கோர் நல்ல ஏற்பாடு செய்து உன் கால பரியந்தம் உன்னைக் காப்பதற்கான வழியைச் செய்யவே நாங்கள் இங்கு வந்தோம். நீ சமத்தாய் தைரியமாய் இருந்தால் சகலமும் தானே நடைபெறும். நீ இப்போது எங்களுடன் வருகிறாயா?" என்றாள்.

கண் :—உன்னைத்தான் மாமி ஆதரிக்கிறார். இன்னும் நானும் வந்து சேர்ந்தால் அவர்களுக்குக் கஷ்டமில்லையா! நம்மால் அவர்களுக்கு எத்தனைச் சிரமம்? எங்காவது ஒரு இடத்தில் இடம் கிடைத்ததும் என்னை அங்கு அழைப்பது தேவலையில்லையா!

மது :—கண்ணம்மா! இன்னொரு முக்கிய சமாசாரத்திற்காகத்தான் நான் உன்னை இப்பொழுதே கூப்பிடுகிறேன். இந்த மாமியாலும் இவா எஜமானராலும் அனேக விதத்தில் உதவி கிடைத்ததின் பலனாக நம்ப அப்பாவுக்கு இப்போது புத்தி சரியாகி விட்டதாம். வீட்டிற்குப் போகலாம் என்று இன்னும் சீக்கிரத்திலேயே சொல்லிவிடுவார்களாம்.

கண் :—ஆ!...அப்படியா? அக்கா! எத்தனை நல்ல சமாசாரம் கொண்டுவந்தாய்? ஆஹா!...மாமீ! நீங்கள் எவ்வளவு நல்லவர்கள். உங்களுக்கு நாங்கள் என்னதான் கைம்மாறு செய்யமுடியும்?

நாக :—கண்ணம்மா! கைம்மாறும், கால்மாறும் இருக்கட்டும். உங்கப்பா வீட்டிற்கு வந்துவிடுவதுபற்றி சந்தோஷப்பட்டுவிடாதே இன்னும் சில வருஷங்களுக்கு உங்கப்பா உங்கம்மாவைப் பார்க்காமல் தனியான ஓர் பிரதேசத்தில் வசித்தால் அவருக்கு மறுபடியும் இம்மாதிரியொன்றும் வராது. அம்மாதிரியில்லை என்றால் மீண்டும்...

கண் :—ஐயையோ! மீண்டும் சித்தக் கலக்கம் வந்துவிடுமா?... மாமீ! அதற்கு என்ன செய்யவேண்டுமென்கிறீர்கள்?

நாக :—செய்வதொன்றுமில்லையம்மா! உங்கம்மாவும் பாட்டியும் அப்பாவின் கண்ணில் படாதபடி உங்கப்பாவுக்கு நீயே எல்லாம் செய்யவேண்டும். ஏதாவதொரு கிராமத்தில் வாஸம் செய்ய வேண்டும். தெரிந்ததா! நீ அதற்குச் சம்மதப்பட்டால் எங்களுடனேயே கிளம்பிவா. மதுரத்தின் சம்பளத்தை அப்படியே உங்களுக்குக் கொடுத்து உதவுவாள். இன்னும் இரண்டொரு மாதம் சென்றதும் உங்கப்பாவுக்கு முன்போலவே வேலை போட்டுத் தரச் செய்கிறேன். பிறகு உனக்கும் ஏற்பாடு செய்கிறேன். உன் தாயாரும், பாட்டியும் நெஞ்சில் ஈவிரக்கமற்ற கட்டைகளாய் மதுரத்தைச் சித்திரவதை செய்தபோதிலும், அவள் இந்தக் குடும்பம் சிதறியதற்காக இரவு பகல் தவிக்கிறாள். அவளால்தான் இத்தனையும் நடக்கிறது. அப்பாவும் பழயபடி சம்பாதித்தால் குடும்பம் சாதாரணமாய் நடக்கலாம். என்ன சொல்லுகிறாய்?—என்றாள்.

கண்ணம்மாள் வயதில் சிறியவளாயினும், மதுரத்தின் உத்தமமான குணத்தையும் நல்ல எண்ணத்தையுங் கண்டு தனக்குள் பூரித்தாள். "மாமீ! நான் உங்கள் பிரியப்படியே செய்கிறேன். என் தாயாரிடம் விஷயத்தைச் சொல்லிவிட்டே வருகிறேன். ஏனெனில் வீண் அபவாதத்திற்கு இடம் இல்லாதிருக்கவேண்டும் பாருங்கள். அதற்காகத்தான் இதோ உள்ளே போய்விட்டு வருகிறேன்" என்று கூறியபடியே உள்ளே ஓடினாள்.

அரை மணி நேரத்தில் சின்னம்மாளும் கண்ணம்மாளும் இவர்கள் வியக்கும்படியாக அங்கு வந்தார்கள். சின்னம்மாள் நாகலக்ஷ்மிக்கு சாஷ்டாங்க நமஸ்காரத்தைச் செய்தாள். மதுரத்தைச் சேர்த்து அணைத்துக்கொண்டு பேசமாட்டாது கண்ணீர் உதிர்த்தவாறு நின்றாள். சற்று சமாளித்துக்கொண்டு, "மதுரம்!... என்னுடைய மலைபோன்ற குற்றங்களை அடியோடு மறந்து எனக்கே நீ நன்மை செய்யவந்திருக்கும் நிலைமையைப் பார்த்தும் மகா பாவி எனக்கு புத்தி வரவில்லை. நீ பொறுமையின் இருப்பிடம் என்று இப்பத்தான் என் பாழும் நெஞ்சில் படுகிறது. என் துர்ப்புத்தி பாதி என்றால் என் தாயாரின் துர்ப்போதனை பாதி சேர்ந்து என்னை யழித்துவிட்டது.

என்னாலேயேதான் உன் தந்தைக்கு இந்த கதி வந்தது. அவருக்கு நன்றாகக் குணமாயிருக்கிறதென்ற சந்தோஷச் செய்தியைக் கேட்டுப் பேரானந்தமடைகிறேன். மதுரம்! மதுரம்!... என்னை மன்னித்துவிடு. உன் கண்ணம்மாளை நீ என்னவேண்டுமாயினும் செய்துகொள்ளு. என்னைக் கேட்கவே வேண்டாம்....

நன்மை தீமை தெரியாது நான் என் தலையில் நானே மண்ணை யள்ளிப் போட்டுக்கொண்டேன். என்னை க்ஷமிப்பாயா! உனக்கு நான் செய்த துரோகத்தை மறந்துவிடுவாயா?" என்று கெஞ்சிக் கேட்டாள்.

கட்டிய புருஷனின் கவலை யறியாது கடன் வாங்கியாவது பட்டுப்புடவை கட்டி மினுக்கிய சின்னம்மாள் ஆயிரம் தையலும் ஒட்டும் போட்டு ஒரு சேலை கட்டியிருப்பதும் அவள் புலம்புவதும் மதுரத்திற்குச் சுரீரென்று மனத்தில் சங்கடம் செய்தது. "சித்தி! நீ ஏன் கண்ணீர் விடுகிறாய்? என் தலை விதிக்கு யார் என்ன செய்ய முடியும்? என் பாபத்தின் நிழல்தான் இம்மாதிரியாயிற்று. முத லில் இந்த புடவையை மாற்றி வேறு புடவை கட்டிக்கொள்ளு. பிறகு பேசலாம்" என்றாள்.

ஆனால் சின்னம்மாள் அதற்குச் சம்மதிக்கவில்லை. "இனிமேல் இத்தனை உயர்ந்த புடவைகள் எனக்கெதற்கு? என் பவிஷுக்கு இன்னும் பகட்டு வேஷமா! வேண்டாம். மதுரம்! வேண்டாம். என் கண் முன்பு உங்களிருவரையும் இம்மாதிரி பார்க்கும் நான் இனி அலங்காரம் வேறு செய்து கொள்ளவேண்டுமா?" என்று மறுத்துவிட்டாள்.

நாக:—இனிமேல் இந்த வைராக்யம் வந்ததில் உபயோகமில்லை. உனக்கென்று பாவம் மதுரம் வாங்கி வந்ததைக் கட்டிக்கொண்டு அவளை த்ருப்தி செய். ஒவ்வொரு வீட்டிலும் பெரிய கிழவி இருந் தால் அது அவ்வீட்டிற்கே பலவிதத்திலும் மேன்மையானதும் பொக்கிஷம் போன்றதுமாகும் என்பார்கள். அதே கிழவி உன் குடும்பத்திற்குச் சத்ருவாயமைந்தாள். விஷப் பூச்சிகளை விரட்டி யடிக்கும் புத்தி உனக்குமில்லாது போயிற்று. இனி வீணாக வருந்தி லாபமில்லை. மதுரத்தைச் செய்த சித்திரவதை போதும். கண்ணம்மாளுக்காவது விடுதலையும் நற்காலமும் கிடைக்கட்டும்.

சின்:—அம்மணீ! இத்தனை நல்லவர்களாகிய உங்கள் வரவை வெறுத்து நான் ஊருக்குச் சென்றதை நினைத்து இனி வெட்கப் பட்டும் வருந்தியும் பலன் ஏது? என்னுடைய துர்ப்புத்தியும் பொறு மைக் குணமும் ராக்ஷஸ ஸ்வபாவமும் என் வயிற்றில் பிறந்த கண் ணம்மாளால்தான் கொஞ்சமாவது விலகின. உங்களிஷ்டப் படியே அவளை நடத்தி, அணைந்த என் குடும்பத்து விளக்கை மீண் டும் நீங்கள் ஏற்றி வைத்தால் போதும். இதோ! மதுரத்தின் திருப்திக்காக இதைக் கட்டிக்கொள்கிறேன். நீங்கள் உள்ளே வாருங்கள். இங்கு ஏன் இருக்கவேண்டும்?" என்று உடனே அழைத்துச் சென்றாள்.

நாகலக்ஷ்மிக்கு ஆச்சரியம் ஒருபுறம்; வெறுப்பு ஒருபுறம்; இரண்டாலும் பாதிக்கப்பட்டவளாய் உட்கார்ந்திருந்தாள். மதுரம்

அப்போதும் தன்பொறுமையை இழக்காமல் "பாட்டி! நான் என்ன குற்றம் செய்திருந்தாலும் நீங்கள் மன்னிக்கவேண்டும். கண்ணம்மாளை நான் அழைத்துப் போகிறேன்" என்றாள்.

கிழவி எதும் பதிலே சொல்லவில்லை. ஒரு நெடுமூச்செறிந்தாள். பிறகு அன்றிரவே மதுரம், நாகலக்ஷ்மி இருவரும் கண்ணம்மாளை அழைத்துக்கொண்டு ஊருக்கு வந்துவிட்டார்கள். கண்ணம்மாளுக்கு இதுகாறும் அடைபட்டுக் கிடந்ததைவிடச் சற்று மனச்சாந்தியும் தெம்பும் உண்டாயின.

நாக :—கண்ணம்மா! முதல் முதல் நான் சொல்லும் வார்த்தைகளைக் கேட்கவேண்டும். உன் தகப்பனாரை இன்னும் ஒரு மாதத்தில் அனுப்பிவிடுவதாகக் கடிதம் வந்திருக்கிறது. அவர் வருகையில் இத்தனை பச்சைக் குழந்தைப் பருவத்தில் உன்னுடைய இந்த வேஷத்தை அவர் கண்டால் சகிக்கமாட்டார். ஆகையால் நீ கட்டாயம் மயிர் வளர்த்தே தீரவேண்டும். அவர் உன்னை இம்மாதிரி கோலத்தில் பார்த்தால் மீண்டும் மூளை கலங்கிவிடும். அதோடு உன் விருப்பப்படியே அனுதையாச்ரமத்தில் இருப்பதற்கும் இந்த கோலம் குழந்தைகளுக்கு வெறுப்பைக் கொடுக்கும். ஆதலால் நீ நான் சொல்வதைக் கேட்கவேண்டும்" என்று வற்புறுத்திக்கூறி அது முதல் அந்த கோர பயங்கர விகாரத்திலிருந்து கண்ணம்மாளைத் திருப்பிவிட்டாள்.

வெகு வேகமாக நாட்கள், வாரங்கள், மாதங்கள் சில கடந்துவிட்டன. நடராஜனுக்கு நன்றாகக் குணமாகிவிட்டதாயும் இனி அழைத்துச் செல்லலாம் என்றும் கடிதம் வந்தது கண்டு மதுரமும் கண்ணம்மாளும் பரம சந்தோஷப்பட்டார்கள். நாகலக்ஷ்மியின் புருஷனே அவரைத் தம் வீட்டிற்கு அழைத்துவந்தார். பழைய ஞாபகங்கள் எதுவும் இராமலும் அதைப்பற்றிப் பேசாமலும் அவரிஷ்டப்படியே இருக்கும்படியும் விட்டார்கள்.

நன்றாகத் தெளிவு வந்து விட்டதால் நடராஜனுக்கு வெட்கமும் துக்கமும் பாதித்துத் தொண்டையை அடைத்தன. கண்ணம்மாளிடமும் மதுரத்தினிடமும் பேசவும் முதலில் சங்கோசப்பட்டு நாணமடைந்தார். உத்தியோகஸ்தரின் எதிரில் தலை காட்டவும் வெட்கி ஒளிந்தார்.

அவருடைய தோற்றம் எல்லோருக்கும் மிகவும் பரிதாபமாக விருந்ததால் அவரை எதும் தொந்தரவு செய்யாது அவரிஷ்டப்படியே விட்டுப் பிடித்தார்கள். சில தினங்கள் சென்ற பிறகு "மதுரம்!...நான் உன்னுடைய பிதாவேயல்ல. நான் உனக்குத் தீராத்துன்பத்தைச் செய்துவிட்ட அபராதி! என் பாபத்தை நான் இந்த ஜென்மத்தில் மட்டு மல்ல, ஏழேழு ஜென்மத்திற்கும் அனுப

விக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். என்னை நீ மன்னித்தேன் என்று சொன்னால்தான் என் மனம் சாந்தி யடைந்து என் சித்தம் கலங்காதிருக்கும்...எங்கே! எங்கே! ஒரு வார்த்தை சொல்லு. மன்னித்தேன் என்று ஒரு வார்த்தை சொல்லு" என்று கெஞ்சிக் கேட்டார். கண்ணீர் உதிர்ந்து ஓடுகிறது.

தந்தையின் பரிதாபத்தைச் சகிக்காத மதுரம், அவருக்கு மீண்டும் புத்தி மாருட்டம் உண்டாகாதிருக்கவேண்டி அரை மனத்துடன், "அப்பா! உங்களை கடவுள் மன்னித்துவிட்டார். அம்பாளும் மன்னித்துவிட்டாள். இனி கவலைப்படாதீர்கள்" என்றாள்.

நடராஜனின் மனம் ஒரு சிறிது சாந்தியடைந்து, "மதுரம்! அந்தப் பரதேசிக் குழந்தைகள் சௌக்யமா! உன்னுடைய ப்ரமாண வாக்குறுதியை மகா பாவி நான் தடைசெய்து கொலையே செய்து விட்டேன். கிருஷ்ணன் சௌக்யமா?" என்றார்.

இதைக் கேட்ட மதுரத்திற்கு துக்கம் தாங்கமுடியாது தேகம் குலுங்க சிறு குழந்தையைப்போல் விம்மி விம்மி அழுதுவிட்டாள். "அப்பா! குழந்தைகளை அன்று உங்களுடன் வரும்போது பார்த்ததுதான் கடைசி பார்வையாகிவிட்டது. பிறகு இத்தனை வருஷங்களாகப் பார்க்கவே இல்லை. தகவலும் தெரியாது. எங்கேயோ ஆச்ரமத்தில் வளருகிறதாம். கிருஷ்ணன் மட்டும் சில மாதங்களுக்குமுன்பு சாதுக்களின் பஜனைகோஷ்டியில் வந்தார்; பார்த்தேன்.

நட:—பார்த்தாயா! என்ன சொன்னான்? மகா சண்டாளனாகிய என்னைத் திட்டினனா?

மது:—அப்பா! அத்தகைய முன்கோபியும் துரகங்காரியும், அஞ்ஞானியுமல்ல. வெகு சாந்தஸ்வரூபியாய் முதிர்ந்த பக்திமானாக விளங்கினார். என் காலில் விழுந்து வணங்கினார். எனக்குத் துக்கம் தாங்காது புலம்பினேன். "இந்த வேஷம் வேண்டாம்; இனி இப்படித் திரியவேண்டாம். குழந்தைகள் எங்கே?" என்றெல்லாம் எனக்குத் தோன்றியபடி கேட்டேன்.

அவர் மகா வேதாந்தியாய்ப் பதில் சொன்னார். "தாயே! கேவலம் அசேதனப் பிண்டமாகிய என்னால் நீங்கள் பட்ட துன்பம் போதும். குழந்தைகளைப்பற்றி எனக்கேன் கவலை? ஆண்டவன் பிறப்பித்தான்; ஆண்டவன் வளர்க்கிறான். ஆண்டவனிருக்க இந்த ஆண்டிக்கு என் விசாரம்? நான் போகிறேன். ஜெ ஸீதாராம்!" என்று கூறிக்கொண்டே போய்விட்டார்...அதன்பிறகு இதுவரையில் காணவே இல்லை. இந்த மாமியும் எத்தனையோ பிரயத்தனம் செய்து வருகிறாள். ஒன்றும் பலனில்லை.

நடராஜனின் இதயம் துடிக்கும் வேகத்தை அளவிடவே முடியாது. "உம். இத்தனை சிதறலுக்கும் காரணம் நான்தானே! நான்

கரைப்பார் வார்த்தைகளைக் கேட்டு என் சுய உணர்வை இழந்த தினால்தானே இத்தனை ஆபத்துக்களும் விளைந்தன" என்று தனக் குள் இடிந்துபோய்விட்டான். அவன் கண்முன்பு உலகமே தலை கீழாய்ச் சுற்றுவதுபோலும், கால தேவதை இவனைக் கண்டு கை தட்டிச் சிரிப்பதுபோலும் தோன்றியது. முகத்தில் பயங்கரம் தாண்டவமாடியது. கண்கள் தாமாகவே மூடிக்கொண்டன. வெயர்வை வெள்ளம் குபீரென்று பொங்கி வழிந்து தேகமே நடுங்கியது.

## 33

### விரக்தி நெஞ்சில் துளிர்த்த அன்பு

வெயர்வை வெள்ளம் குபீரென்று பொங்கி வழிந்து தேகமே நடுங்கியது. கண்கள் தாமாகவே மூடிக்கொண்டன. சில விநாடிகள் ஒன்றுமே தோன்றவில்லை. மீண்டும் கண்ணைத் திறந்தான். ஆற்றங்கரையிலுள்ள அரசமரத்தடியில் படுத்திருக்கும் கிருஷ்ணனுக்கு அதற்குமேல் சரீரம் இருப்புகொள்ளவில்லை.

ஹிருதயத்தில் செய்யும் சங்கடத்தை அவனால் சகிக்கமுடிய வில்லை. புத்திரவாஞ்சை யொருபுறம் பிடித்திழுக்கிறது. ஆனால் "குழந்தைகள் குதூகலமாயிருப்பதைக் கலைப்பதா? அதனால் என்ன லாபம்? குழந்தைகளின் உணர்ச்சி வேறுமாதிரியாகிவிட்டால்?"... என்று சில விநாடிகள் குழம்பித் துடித்தான்.

ஆற்றங்கரை மரத்து நிழலில் சேவாசங்கத்தைச் சார்ந்த சிலர் வெகு சந்தோஷத்துடன் தேசிய கீதம் பாடியபடியே சிற்றுண்டி யருந்திக் களித்திருந்தார்கள். அக்கூட்டத்தில் ஸரஸ்வதியும், பார் வதியும் நன்றாகச் செழிப்புற்று மதமதவென்று வளர்ந்து பார்ப்ப தற்கு முற்றிலும் அழகு வெள்ளமாய் ஆனந்த ரூபிகளாய் பெத்த பிதாவே வியக்கும்படியாகக் காட்சி கொடுத்ததைப் பார்த்த கிருஷ் ணனுக்கு தந்தையின் பாசம் பாசிபோல் வந்து மூடியது. எத்தனை விலக்கியும் தாங்கமுடியவில்லை. "என் கண்மணிகளை நான் ஏன் பார்க்காமலிருக்கவேண்டும்? நான் என்ன அத்தனை நிர்ப்பாக்கிய வானா! இல்லை. இல்லை. என் செல்வங்களைக் கட்டியணைவேன். என்று பைத்தியம் பிடித்தவன்போன்றும் கட்டை அவிழ்த்துவிட்டப் பசு வைப்போன்றும் வெறி பிடித்து ஆற்றங்கரைப் பக்கம், "ஸரஸ்வதீ!

பார்வதி!...என் கண்மணிகாள்...என் செல்வரத்தினங்காள்!" என்று கதறியவாறு ஓடிப்போய் இரு குழந்தைகளையும் ஒன்ருகச் சேர்த்து அவர்கள் மூச்சுத் திணறும்படிக் கட்டியணைத்து பல முத்தங்களை சரமாரியாய்க் கொட்டிக் கண்ணீரால் நீராட்டினுன்.

முற்றுந் துறந்த முனிவர்களுக்கும் நாடோடியாய் வீதியில் திரியும் ஆண்டிகளுக்கும் சில பாசங்கள், பந்தங்கள் விடுவதில்லை என்ருல் இளங்காளையான கிருஷ்ணனை மட்டும் விட்டுவிடுமா! அந்த விதிக்கு அவன் மட்டும் விலக்காகிவிடுவானு? இதயத்தில் பொங்கி வரும் வாத்ஸல்யத்தின் வேகம் பெருமூச்சாகத் திணறி வருகிறது.

ஆனந்தமாய்ப் பாடிக்கொண்டே சாப்பிடுகையில் பயித்தியக் காரன்போல் தாடியும் மீசையுமாகப் பார்ப்பதற்குப் பயங்கரமான தோற்றத்துடன் ஒரு மனிதன் தங்களைக் கட்டியணைத்ததைப் பார்த்ததும் குழந்தைகள் பயந்துபோய், "ஹா!...பயித்தியம்...பிச்சைக்காரன்!"...என்று பெரிதாகக் கத்திக் கூவியவாறு அலறிப்போய் எழுந்து சேவாசங்கத்துத் தலைவியிடம் ஓடப்போனுர்கள்.

கிருஷ்ணனுக்கு அப்போது எப்படித்தானிருக்கும்? தவிக்கின்றது..."கண்மணிகளே! நான் தெரியவில்லையா?...இதோ பாருங்கள்...உங்கப்பாவல்லவா நான்!...என்னைத் தெரியவில்லையா?...ஓடாதீர்கள். இப்படி உட்காருங்கள்" என்று கண்ணீர் பெருகக் குழந்தைகளை அணைத்து இழுத்தான்.

குழந்தைகளில் பெரியவளுக்குக் குழப்பமுண்டாகிவிட்டது. தகப்பனுரைக் கண்டு வருடக்கணக்காகிவிட்டதால் அவளுக்கு சந்தேகமும் குழப்பமும் உண்டாயின. சிறியவளுக்கு சற்றும் நம்பிக்கையே இல்லாது, "நீ அப்பா இல்லை. நீ பூச்சாண்டி, நீ பிச்சைக்காரன்...உன்னைப் பாத்தா பயம்மா இருக்கு...அக்கா!...எழுந்து வந்துடு" என்று சற்று அழவும் ஆரம்பித்துவிட்டாள்.

ஸரஸ்வதி தைரியத்தை விடாமல்..."நீ எங்கப்பா இல்லை. எங்கப்பா நன்ருயிருப்பாரே! இந்தமாதிரி தாடி மீசை அவருக்குக் கிடையாது. நீ யாரோ பிச்சைக்காரன். எங்கப்பாதான் எங்களை மறந்துட்டாரே"....என்று கூறும்போது குழந்தையின் தொண்டையை அடைத்தது. துக்கம் தாங்கமுடியவில்லை. குபீரென்று அழுதுவிட்டாள்.

இதைப் பார்த்த கிருஷ்ணனுக்கு உள்ளம் பகீரென்று எரிந்தது. "ஆம். நாகரிகக் குழந்தைகள் இந்தக் காட்டுமுராண்டியை எப்படி அறியமுடியும்? உண்மையில் அவர்களுக்குப் பிதா நானல்ல. சாக்ஷாத் எம்பெருமான்தான் பிதா. அதையறிந்துதான் குழந்தைகள் தைரியமாகக் கூறுகிருர்கள்'என்று தனக்குள் எண்ணிக்கலங்கினுன்.

அதே சமயம் ஆச்ரமத்தைச் சார்ந்த காரியதரிசி கிருஷ்ணனைப் பார்த்ததும் திடுக்கிட்டு "இதென்ன...என் இந்த வேஷம்?...எனக்கே புரிவதற்கு இத்தனை நேரமாயிற்றே! வருஷக்கணக்காய் பார்க்கா திருக்கும் குழந்தைகளுக்கு எப்படி புரியும்? குழந்தைகள் கொஞ்ச நாளாய் சதா உங்கள் ஞாபகமாகவே இருக்கிறார்கள். நான் எத்தனை கடிதங்கள் போட்டும் பதிலே இல்லாததால் எனக்குப் பலவித மான யோசனைகளுண்டாகிவிட்டன. இத்தனை நாள் எங்கு சென்றிருந்தீர்கள்? ஏனிந்த வேஷம் பூண்டீர்கள்? ஸரஸ்வதி! பார்வதி! பயப்படாதேம்மா. இவர்தான் உங்கப்பா!" என்று சமாதானம் செய்தார்.

ஸரஸ்வதி அப்போதும் அரை மனதுடன் "எங்கப்பாவா நீ! இல்லையே! எங்கப்பா நன்னாயிருப்பாரே! எங்கப்பான்னு சொல் விண்டு எங்களே அழைச்சிண்டு போகப்பாக்கிறயா?"...என்றாள். அத்தனை விசனத்திலும் கிருஷ்ணனுக்கு குபீரென்று ஒரு சோகச் சிரிப்பு எங்கிருந்தோ வந்தது.

"உம். என் இதய உறுதியை வளர்க்க இந்த தாடியை வளர்த்தேன். ஆனால் குழந்தைகளை சோதிக்கக்கூடாது. ஏற்கெனவே என்னை நினைத்து வருந்தியதாகத் தெரிந்த பிறகு குழந்தைகளை கலங்க வைப்பது சண்டாளத்தனமாகும்" என்று தனக்குள் எண்ணி ஓட்டமாகச் சென்று தீக்ஷையைக் களைந்துவிட்டு அதே ஆற்றில் ஸ்நானத்தைச் செய்துவிட்டு ஓடோடிவந்தான்.

குழந்தைகளின் சந்தேகம் பூராவும் நிவர்த்தியாகிவிட்டது. "அப்பா! அப்பா! இப்ப நீ நிசம்மா எங்க அப்பாதான். என்னப்பா! எங்களை அடியோடு மறந்துட்டயே...மன்னியம்மா வந்தாளாப்பா!...அவளும் மறந்துபோயிட்டா" என்று கூறிக் கொண்டே தகப்பனாரைக் கட்டிக்கொண்டு, விடவே இல்லை.

கிருஷ்ணனால் பேசவும் முடியவில்லை. குழந்தைகளை விடவும் மனம் வரவில்லை. மாறி மாறிக் கட்டியணைத்து வாத்ஸல்ய முத்தமிட்டான். குழந்தைகளின் செழிப்பான வனப்பு அவனை ப்ரமிக்கச் செய்தது. தன்னிடமிருந்தபோது தாயில்லாப்பரிதாபம் தாண்டவமாடிய அதே குழந்தைகள் இப்போது நிறைந்த சந்தோஷத்துடன் தெம்பாயிருப்பதால் அவன் இதயத்தில் சந்தோஷம் அலைமோதியது. கிடைத்தற்கரிய அருமையான குழந்தைகளைப் பிரிந்து நாம் ஏன் ஆண்டியைப்போல் ஒண்டிக்கட்டை வாழ்வு செய்யவேண்டும்? பங்கஜம்தான் மறைந்தாள். அவள் அன்புருவாய் அளித்துச் சென்ற பொக்கிஷத்தையும் நான் ஏன் இழந்து தவிக்கவேண்டும்? முடியாது; முடியாது. இனி என் செல்வங்களைப் பிரிந்திருக்க முடியாது" என்று தனக்குள் வெறிபிடித்தவன்போல் கூறிக் கொண்டான்.

குழந்தைகளும் பிரிந்த தந்தையின் தரிசனத்தினல் மெய்ம் மறந்தார்கள். "எம்பா! நீ ஒருதரங்கூட எங்களே வந்து பார்க்கவே இல்லே? ஒரு கடிதாசிகூடப் போடவில்லே? இங்கிருக்கிற எல்லா பசங்களுக்கும் அவா அப்பா, அம்மா வந்து பாக்கறபோது நீ யேன் வல்லேன்னு எங்களுக்கு அழுகையா வரும்பா.... அந்த பசங்கல்லாம் "ஒங்கப்பா வல்லேயே! எங்கப்பா வந்தாளே!" என்று எங்களே பரிகாஸம் பண்றப்போ நிசம்மா அழுதுடுவோம்பா! நீ ஏன் அப்பிடி இருந்தே? இத்தனே நாள் எங்கே போயிருந்தே? எங்களுக்கு பணமனுப்பரத்தேகூட நிறுத்திட்டு என்னுப்பாபண்ணே?" என்று ஸரஸ்வதி கேட்டாள்.

உலகமறியாத குழந்தைக்கு என்னதான் பதில் சொல்வான்? "கண்ணூ! நான் செய்ததெல்லாம் தப்புத்தான். ஒங்கப்பாவின் குற்றத்தை நீ மன்னிக்கக்கூடாதா? என்ருன்.

ஸர:—ஐயையோ! அப்படி சொல்லாதே! பெரியவாளே சின்னவா மன்னிக்கறதாவது? அது ரொம்ப தப்பாச்சே! எங்களே மறந்துட்டாயேன்னு கேட்டேம்பா. வேறே ஒண்ணுமில்லே. மன்னியம்மாவே நீ பாத்தியோ! அவளுக்கு எங்க ஞாபகமிருக்கோ!

கிரு:—பாத்தேண்டா கண்ணூ! உங்க ஞாபகமாகவே சதா இருக்காளாம், உங்களே மறக்கவே இல்லேடா ராஜா! நான் ஊரு ஊராய் ஸ்வாமி தரிசனம் செய்யப்போனேன். அப்படியே ஒரு பஜனே கோஷ்டியில் சேர்ந்துட்டேன். அதிலேயே அலேகிறேன். எங்கேயாவது நீங்கள் சுகமாயிருந்தாபோதுமென்று நான் பேசாமலிருந்தேன். வேறு ஒன்றும் வித்யாஸமில்லேம்மா!

ஸரஸ்:—எம்பா! ஸ்வாமி தரிசனம் பண்றப்பொல்லாம் எங்களே நெனச்சிண்டியோ! தரிசனமெல்லாம் நன்னுயிருந்ததா!

கிரு:—கண்ணூ! உங்களே நினேக்காமலிருக்கமுடியுமா! உங்களே நினேத்து வேண்டிக்கொண்டுதான் தரிசனம் செய்தேன்.

ஸர:—அப்பப்பா! எங்களுக்கு இப்போ ஹிந்தி படிக்கவும் பேசவும் நன்னு வருமே...தமிழ்கூட ரொம்ப நன்னு படிக்கிறேம். நாங்கள் லெச்சர்கூட செய்வோம்பா! அப்பா! இதோ பாரேன்.

> "மகா ஜனங்களே! நம் பாரதநாட்டின் க்ஷேமத்திற்காகவும் விடுதலேக்காகவும் நீங்கள் எல்லோரும் ஒற்றுமையாகக் கதரணிந்து காங்கிரஸில் சேரவேண்டும். "ஒன்றுபட்டால் உண்டு வாழ்வே; நம்மில் ஒற்றுமை நீங்கிடில் அனேவர்க்கும் தாழ்வே" என்று பாரதியார் பாடியிருக்கிருர். ஆகையால் எல்லோரும் தேசசேவை செய்ய வாருங்கள்."

என்று பிரசங்கம்போல் செய்து காட்டிச் சந்தோஷப்பெருக்கால் தகப்பனாரைக் கட்டிக்கொண்டாள்.

இதைக் கேட்ட கிருஷ்ணனின் உள்ளம் பூரித்து இன்பவாரிதியில் மிதக்கச் செய்தது. ஸரஸ்வதியை ஒரு குழந்தையாக நினைக்காமல் பெரிய தலைவியைப்போலவே எண்ணிவிட்டான். குழந்தைகளின் ஸ்வபாவமே, தங்களுக்கு வேண்டிய யாரைக் கண்டாலும் தமக்குத் தெரிந்த சகல வித்தைகளையும் மடமடவென்று செய்து காட்டுவதும், பாடிக்காட்டுவதும், படித்துக்காட்டுவதும் வழக்கமல்லவா! அதுபோல் ஆச்ரமத்தில் தாங்கள் கற்ற சகல வித்தைகளையும் மடமடவென்று ஐந்து நிமிஷத்தில் செய்து காட்டினார்கள்.

இரட்டிப்பான ஆனந்தத்துடன் கிருஷ்ணன் புது உலகில் புது ஜென்மம் எடுத்தவனைப்போல் தன்னை மறந்து பார்த்துக்கொண்டிருந்தான். சற்று நேரம் ஆனதும் ஆசிரமத்தின் தலைவர், "சரி! நாம் கிளம்பலாமா!....என்ன ஸரஸ்வதி! நீ வருகிறாயா! அப்பாவுடன் இருக்கப்போகிறாயா?" என்று கேட்டார்.

சிறுமியின் உள்ளத்தில் குழப்பமேற்பட்டுவிட்டது. அப்பாவைப் பிரியவும் மனமில்லை. அப்பாவுடன் இருக்கவும் ஆசை தூண்டுகிறது. மற்றபடி, போகாவிட்டால் எங்கே தலைவிக்குக் கோபம் வந்துவிடுமோ என்கிற எண்ணமும் உண்டாகியது. தாங்கள் அவர்களுடன் போய்விட்டால் எங்கே அப்பா மறுபடியும் போய்விடுவாரோ! என்கிற பயமும் சந்தோஷமும் தோன்றின.

குழந்தைகளின் தத்தளிப்பை யறிந்த தலைவி, "குழந்தைகளே! நீங்கள் அப்பாவுடன் நாம் இறங்கியுள்ள சத்திரத்திற்குப் போயிருங்கள். நாங்கள் வேலையை முடித்துக்கொண்டு வருகிறோம்" என்று கூறியதைக் கேட்ட குழந்தைகளுக்குச் சந்தோஷம் பொங்கியது. அதற்கிசைந்து குதித்தார்கள்.

ஆசிரமவாசிகள்,

1 கண்ணன் திருவடி எண்ணுக மனமே
திண்ணம் அழியா வண்ணந் தருமே.

2 தருமே நிதியும் பெருமை புகழும்
கருமா மேனிப் பெருமா னிங்கே.

3 இங்கே யமரர் சங்கந் தோன்றும்
மங்குந் தீமை பொங்கும் நலமே.

4 நலமே நாடிற் புலவீர் பாடீர்
நிலமா மகளின் தலைவன் புகழே.

183042

5 புகழ்வீர் கண்ணன் தகைசே ரமரர்
தொகையோ டசுரப் பகைதீர்ப்பதையே.

6 தீர்ப்பான் இருளைப் பேர்ப்பான் கலியை
ஆர்ப்பா ரமரர் பார்ப்பார் தவமே.

7 தவறு துணர்வீர் புவியீர் மாலும்
சிவனும் வானோர் எவரும் ஒன்றே.

8 ஒன்றே பலவாய் நின்றோர் சக்தி
என்றுந் திகழும் குன்றா வொளியே. —பாரதி.

என்றுபாடியபடியே ஆற்றங்கரையைவிட்டுச்சென்றார்கள். சிலவருஷங்களுக்கு முன்பு குழந்தைகளை அவர்களுடன் அனுப்பிவிட்டுக் கண்ணீர்வழிய நின்று பார்த்த நினைவுகள் கிருஷ்ணன் மனத்தில் பளிச்சென்று தோன்றின. இன்று குழந்தைகள் தன்னைக் கட்டிக்கொண்டிருக்கையில் அந்த ஊர்வலம் செல்லும் காக்ஷி அவனுக்கு பிரம்மானந்தமாயிருந்தது. இருபக்கமும் இரு குழந்தைகளை அணைத்துக்கொண்டு அப்படியே மெய்மறந்த பதுமைபோல் நின்றான். அவன் வாய்க்குள் கீழ்குறித்த வார்த்தைகள் மெல்ல காற்றுடன் கலந்து வெளிப்பட்டன. "இனி என் கண்மணிகளைப் பிரியமாட்டேன். அரை வினாடியும் பிரியமாட்டேன். இன்பவாரிதியில் என்னுயுள் பரியந்தம் மிதப்பேன். அதுவே என் ஸ்வர்க்கம். அதுவே என் ஜன்மத்தின் ஸார்த்தகம்."

## 34

### சந்தோஷ மழை—சங்கட இடி

"அதுவே என் ஸ்வர்க்கம். அதுவே என் ஜன்மத்தின் ஸார்த்தகம். இன்பவாரிதியில் என்னுயுள் பரியந்தம் மிதப்பேன். என் கண்மணிகள்....என் செல்வங்கள் எங்கே?...என் ஸரஸ்வதியும், பார்வதியும் எங்கே? அந்தப் பரதேசிக் கிருஷ்ணன் எங்கே? அவர்களைப் பார்க்கும்வரையில், எமதர்மராஜனே! என்னருகில் வராதே! நான் ஆதிமுதல் கஷ்டப்பட்ட கட்டை, அந்திமத்திலாவது என் இன்ப வடிவங்களைப் பார்க்கும் பாக்கியத்தைப் பெற்றனுபவித்துவிடுகிறேன். அதுவரையில் விலகி இரு" என்று மதுரம் வாய்ப்பிதற்றுகிறாள்.

அன்று அவளுடைய பரிதாபத்தைச் சோதித்து அவளை சத்ருவாக நடத்திய சின்னம்மாளே இப்போது மதுரத்தின் பக்கத்தில் உட்கார்ந்து மூக்கைச் சிந்தியும், கண்ணைத்துடத்தும் முகத்தைத் தொங்கவிட்டுக்கொண்டும் உட்கார்ந்திருக்கிறாள்.

கண்ணம்மாள் மதுரத்தின் இரு கைகளையும் பிடித்துக் கொண்டு, "அக்கா! பயப்படாதே! உனக்கு ஒரு ஆபத்துமில்லை. கஷ்ட மனுபவிக்கவேண்டிய காலமெல்லாம் நீங்கி நீ சந்தோஷம் இன்னதென்று உணரும் சமயத்தில் உன்னை பகவான் கவிழ்த்துவிட மாட்டார். புலம்பாதே அக்கா! அதோ பாரு. நாகலக்ஷ்மியம் மாமி வந்திருக்கிறார். அப்பா உன் கண்மணிகளைத் தேடிக்கொண்டு போயிருக்கிறார். எப்படியும் கண்டுபிடித்துவிடுவார். பயப்படாதேக்கா" என்று கண்ணீர் வழியக்கூறி மதுரத்தைத் தடவுகிறாள்.

மதுரத்தின் வாய்மட்டும் பிதற்றுகிறதேயன்றிக் கண்கள் இறுக மூடியிருக்கின்றன; ஆனால் இரண்டு நீர் அருவிகளைப்போல் கண்கள் காணப்பட்டன. உடம்போ ஒரே நெருப்புத் தணல்போல் கொதிக்கின்றது. "ஐயோ!...பங்கஜம்! உண்மை. உண்மை...நீ சொல்லுவது முற்றிலும் உண்மை. நான் மோசக்காரி. நியாயம் தப்பி ப்ரமாணத்தையும் மீறி உனக்குக் கொடுத்தவாக்குப்படி நடக்காது பெரும் பாவியாகிவிட்டேன். நான் பெரிய அபராதி. மகா மோசக்காரி. பங்கஜம்! நீ உத்தமி; என்னைச் சபித்துவிடு. அப்படியே விழுங்கிவிடு. சாம்பராக பஸ்மீகரம் செய்துவிடு" என்று மீண்டும் தன்போக்காகப் பிதற்றுகிறாள்.

உடனே ஒரு சிறிது தெளிவு கண்டவளாய் "கண்ணம்மா! பொய் சொல்லாது சொல்லு. அப்பாவா போயிருக்கிறார்? மாமீ! நீங்க ரொம்ப நல்லவராயிற்றே! அப்பா நிஜமாகப்போயிருக்கிறாரா! இல்லாவிட்டால் என்னைப் பெத்த தாயாரைப்போன்ற நீங்கள் இப்போதுஎன்னை அழைத்துப்போங்கள். எழுந்திருங்கள்" என்று ஆவேசத்துடன் கட்டிச்சுருட்டிக்கொண்டு எழுந்திருக்க முயன்றாள்.

உடனே நாகலக்ஷ்மியே அவளை மெல்ல அமர்த்திப் படுக்க வைத்துச் சமாதானம் செய்தபடி "மதுரம்! இதோ பாரம்மா! நீ பட்ட துன்பம் ஒரு பாரதக்கதை எழுதலாம். உன்னை ஆட்டிவைத்த மனிதர்களை எல்லாம் நீயே பதம்பெறச் செய்தாய். உனது இத்தகைய அருமையான பரிசுத்தத்தைத் தெரிந்தும் இனி உன்னை ஒருவரும் நம்பாது ஏமாற்றமாட்டார்கள். உங்கப்பா நிஜமாகத்தான் போயிருக்கிறார். அவர் போய் மூன்று நாட்களாகின்றன. இன்னும் தகவல் தெரியவில்லை. வந்துவிடுவார். பயப்படாதேம்மா! பகவானைத் துதித்தபடியே இரு. இன்று மாமா வேறொரு பெரிய டாக்டரை அழைத்துவரப்போகிறார். அவர் வந்ததும் உனக்கு நன்றாக

குணமாகிவிடும்'' என்றுள். நிமிடத்திற்கு நிமிடம் மதுரம் குழந்தை களைப் பற்றியே பிதற்றிக்கொண்டிருந்தாள்.

ஆற்றங்கரையில் கிருஷ்ணனும் குழந்தைகளும் ஒருவரையொரு வர் பிரிய மனமின்றி பேசிக்கொண்டிருந்தார்கள். குழந்தைகள் "ஏம்பா! மன்னியம்மாவே பாக்கணுமேப்பா! அவா அப்பா ரொம்ப பொல்லாதவான்னு சொன்னயே! நம்ப மன்னியம்மாவே பாக்கப்போனு அவர் அடிச்சுபுடுவாரோ! மன்னியம்மா ரொம்ப நல்லவளாச்சேப்பா!'' என்று கேட்பதை விடவே இல்லை.

என்றைக்கோ ஒரு நாள் பஜனையின்போது வருகையில் அகஸ் மாத்தாக மதுரத்தைப் பார்த்து நமஸ்கரித்ததைத் தவிர வேறு விஷயம் ஒன்றும் தெரியாதாகையால் சற்று குழம்பினன். "எது எப்படியா யினும் இருக்கட்டும். குழந்தைகளும் அவளைப் பார்க்கப் பறக்கி ருர்கள். அவளும் குழந்தைகளின்மீதே உயிராக விருக்கிருள். எந்த வீட்டில் நாம் அவளைப் பார்த்தோமோ, அதே ஊருக்கு அதே இடத் திற்குச் சென்று பார்ப்போம்'' என்று தனக்குள்ளே தீர்மானத் தைச்செய்துகொண்டு, குழந்தைகளையும் சமாதானம் செய்தான்.

அச்சமயம் தாங்கமாட்டாத துக்கமும், பதைபதைப்பும் ஆவே சமும் கொண்டு நடராஜன் ஓட்ட ஓட்டமாக ஓடிவந்து '‚கிருஷ்ணு! கிருஷ்ணு!'' என்று கதறியவாறு அவனைச் சேர்த்துக் கட்டிக் கொண்டான்.

கிருஷ்ணனுக்கு ப்ரமித்துவிட்டது. முதலில் யாரோ பயித்தியக் காரன் என்று நினைத்துவிட்டான். பிறகு உற்றுப் பார்த்து கூறத் திறமற்ற வியப்புடன் பேசத்தொடங்கி "யாரு! நடராஜ மாமாவா?'' என்று பயந்தபடி கேட்டான்.

நட:—ஐயோ! மாமா பட்டம் வேறு இந்தப் பாவிக்குவேண் டுமா! கிருஷ்ணு! எந்த வாயால் அடாத வார்த்தைகளை துராகிருத மாகக்கூறி உன்னை நிர்த்தாக்ஷிண்யமாக அடித்தேனே, அதே சண் டாளன் இப்போது அதே வாயால் உன்னிடம் மன்னிப்புக் கேட்கிறேன். அதே கையால் உன்னுடைய பிரமாணத்தைக் கோருகி றேன். நீ என்னைவிட வயதில் எத்தனையோ சிறியவனுகவிருந்தும் புத்தியிலும் ஒழுக்கத்திலும் உத்தம குணத்திலும்அபாரமாய் பிரகா சிக்கிருய். உனக்கிருக்கும் வைராக்கியமும் உனது காருண்ய குண மும் என்னிடம் சூன்யமாகி ஒரு எந்திர மனிதனைய் காலந்தள்ளி விட்டதன் பலனை பலவிதத்திலும் அனுபவித்துவிட்டேன். இனி பாக் கியே இல்லை. கிருஷ்ணு! உன் தாயிக்குச் சமமாக நீ நினைத்திருக்கும் மதுரம் சாகக் கிடக்கிருள். இத்தனை நேரம் அவள் உயிர் இருக் கிறதோ இல்லையோ! ஈச்வரனுக்கே அர்ப்பணம்...

இந்த வார்த்தைகளைக் காதில் கேட்ட கிருஷ்ணன் முள்ளை மிதித்தவன்போல "ஹா! மன்னியக்கா!...என் உத்தம தாயாருக்கா... என் ஞான குருவுக்கா உடம்பு?...ஐயயோ! குழந்தைகள் பார்க்க வேண்டுமென்று தவிக்கிறார்களே!....என்ன உடம்பு மாமா!.... முதலிலேயே இதைச் சொல்லாமல் வளைத்து வளைத்துப்பேசிக் காலத்தைக் கடத்திவிட்டீர்களே!....என்ன பண்ணுகிறார்கள்? என்ன என்ன உடம்பு?" என்று கண்ணீர நீரை உதிர்த்துக்கொண்டே அபாரமான துக்கத்துடன் கேட்டான்.

ஸரஸ்வதி விபரம் தெரிந்தவளாகையால் "ஐயோ! எங்க மன்னியம்மாவுக்கா உடம்பு?...அப்பா! இந்த மாமாவோடே நீ பேசாதேப்பா! இவா ரொம்ப பொல்லாதவா! எங்கிட்ட ஆசையா இருந்த மன்னியம்மாவே வேணும்னு அழைச்சிண்டு பூட்டா. இந்த கெட்ட மாமா இங்கு ஏன் வந்தா? நீ வாப்பா! நம்ப மன்னியம்மாவே நாம்ப போய் பாக்கலாம்...நாம்ப ஸ்வாமியெல்லாம் வேண்டிண்டு அவளுக்கு உடம்பு சீக்கிரம் தாவளையாகணும்னு பிரார்த்தனை பண்ணலாம்பா. வாயேன்" என்றாள்.

களங்கமற்ற குழந்தையின் வார்த்தை நடராஜனுக்கு, தான் செய்த குற்றத்திற்காக தன்னை செம்மட்டியால் அடிப்பதுபோலிருந்தது. குழந்தையை இழுத்துக் கட்டிக்கொள்ளப் போனான். அவள் சடக்கென்று விலகி அப்பாவின் பின்னால் நின்று "என்னைத் தொடாதே மாமா! நீங்க ரொம்ப பொல்லாதவா....அப்பா!...மன்னியம்மா எங்கே இருக்காப்பா?...வாயேன் போகலாம்" என்று அழுதபடியே ஆத்திரத்துடன் கேட்டாள்.

கிருஷ்ணனின் துக்கம் தாங்கமுடியவில்லை. "இந்தப் பரதேசியை மனதார ஆசீர்வதிக்கும் உத்தமி எங்கேயோ ஒருத்தியாவது இருக்கிறாள் என்று எண்ணினேன். அவ்வெண்ணத்திலும் கடவுள் மண்ணைப்போட்டுவிடுவார்போலிருக்கிறது" என்று தேகம் குலுங்கப் புலம்பித் தவித்தவாறு, "மாமா! பழங்கதை எல்லாம் பகவானுக்கே அர்ப்பணம். என் தாயாருக்கு என்ன உடம்பு? சொல்லுங்கள். நான் அவர்களைப் பார்க்கும் பாக்கியமாவது பெறுவேனா? என்னிதயம் வெடித்துவிடும்போலிருக்கிறதே!" என்று தவித்தவாறு கூறினான்.

நட:—அப்பா, கிருஷ்ணா! நான் என்னவென்பேன்? என் குடும்பத்தின் சீர்கேடெல்லாம் உனக்குத் தெரியுமோ, தெரியாதோ! (சுருக்கமாகக் கூறி) இப்படியாகிவிட்டது. எல்லா களேபரங்களும் முடிந்து இப்போதுதான் ஒரு வருஷகாலமாகச் சுகமாயிருக்கிறோம். வித்யா சங்கத்தில் கண்ணம்மாள் படித்து வருகிறாள். மதுரத்திற்கு உன் நினைவும் குழந்தைகளின் நினைவும் சதா அவளை உருக்கிவந்தன. அதே பலஹீனப்பட்டுவிட்டது. திடீரென்று ஜுரம் வந்து ஜன்னி

மாதிரியாகி அதிகப்பட்டுவிட்டதால் சதா வாய்ப் பிதற்றுகிறாள். எப்படியும் உன்னை நானே அழைத்து வருவதாக ஓடிவந்தேன். மூன்று நான்கு நாட்களாய்த் தேடியலைந்து ஊர் ஊராய்ச் சுற்றி இப்போது கண்டு பிடித்தேன். உடனே வா போகலாம்—என்று கூப்பிட்டார்.

கிருஷ்ணனுக்கு எப்படித் தானிருக்கும்? விதியே! விதியே! உன் விளையாட்டின் விபரீதந்தான் என்னே? உன்னுடைய லீலையில் எத்தனை விசித்திரங்களைக் காணலாம். உன் சக்திக்குத்தான் என்ன வன்மை இருக்கிறது? கடவுளின் சக்திக்குமேற்பட்டதா உன்சக்தி?''

## 35

## ஆண்டவனின் அதிசயத்தை அறிந்திடல் கூடுமோ?

"கடவுளின் சக்திக்குமேற்பட்டதா உன் சக்தி? உன் சக்திக்குத் தான் என்னவன்மை இருக்கிறது? உன்னுடைய லீலையில் எத்தனை விசித்திரங்களைத்தான் காணலாம்? விதியே! விதியே! உன் விளையாட்டின் விபரீதந்தான் என்னே? எங்கேயோ கிடந்த என்னை இழுத்து பச்சிளங்குழந்தைகளைக் காட்டி அவற்றிடம் பாசத்தை ஊட்டிப் பிறகு பிரித்து என்னை வாட்டி வதைப்பது என்ன நியாயம்? என்னுடைய பிறவியில் நான் அடையும் லாபம் இதுதானா...எங்கே குழந்தைகள்? குழந்தைகள் வந்தார்களா! கிருஷ்ணா! கிருஷ்ணா! ஸரஸ்வதி! பார்வதி! கண்மணிகளே!'' என்று பிதற்றுகிறாள். ஜுரம் 105 டிகிரி காய்கிறது. ஐஸ் தலையில் வைத்திருக்கிறது.

மதுரத்தின் நிலைமையைக் காணக்காண நாகலக்ஷ்மிக்கும் கண்ணம்மாளுக்கும் மனத்தில் தைரியங் குறைந்துவிட்டது. அவநம்பிக்கையே அதிகப்படவாரம்பித்தது. "சென்ற மனிதன் இன்னும் வரவில்லையே! என்ன செய்வது?'' என்கிற கவலையும் உண்டாகி விட்டது. எங்கே போயிருக்கிறார் என்பது எப்படித் தெரியும்? கலவரத்துடன் அவர் வருகையை எதிர்பார்த்துக்கொண்டிருந்தார்கள்.

கிருஷ்ணனின் மனம் தவிக்கிறது. இத்தனை வருஷங்களாக வைத்துக் காப்பாற்றிய ஆசிரமத்தினரிடம் சொல்லிவிட்டுக் குழந்தைகளை அழைத்துச் செல்வதல்லவா நியாயம். அதற்காக ஆசிரமத்தவர்கள் ஊர்கோலம் சென்ற திக்கைத் தேடிக்கொண்டு குழந்தைகளுடன் ஓடினான்.

எப்போதும், வெகு அவசரமாகக் காரியம் ஆகவேண்டும் என்ற சமயந்தான் எதிர்பாராத இடையூறுகள், தாமதங்கள், தடங்கல்கள், ஒன்றன்மீதொன்ருக வரும். அதேபோல் ஊர்வலத்துடன் சென்றவர்களை எந்த தெருவில் சடக்கென்று கண்டுபிடிக்கமுடியும்? திடீரென்று மழை வேறு வந்துவிட்டதால் வீதியில் பஜனையுடன் போகாமல் அவர்கள் ஒரு கோயிலில் தங்கிவிட்டார்கள்.

கிருஷ்ணனின் மனம் படும்பாட்டில் மழையின் உபத்திரவம் அவனுக்கு ஒரு பொருட்டாகவேதோன்றவில்லை. அலறிக்கொண்டே ஓடி அவர்களைக்கண்டுபிடித்தான். "குழந்தைகளைப் பிரிந்திருக்க என்னால் முடியவில்லை. அதோடு குழந்தைகளைத்தாய்போல் வளர்த்த உத்தமி படுக்கையாய்ப் படுத்திருக்கிருர்களாம். நான் இவர்களை அழைத்துச் செல்கிறேன். உத்தரவளிக்கவேண்டும்" என்று வணக்கமாய்க் கேட்டான்.

அதிகாரியும் உத்திரவு கொடுத்துவிட்டு, குழந்தைகளைத் தட்டிக்கொடுத்துப் பின்னர், "ஸரஸ்வதி! நீ பாட்டுப் போட்டியிலும், குழந்தைகள் தக்ளிப்போட்டியிலும் வாங்கிய பரிசுகள் ஆச்ரமத்திலிருக்கின்றன. நான் பிறகு அவைகளையும் உங்கள் துணிகளையும் அனுப்புகிறேன். மறுபடியும் நீங்கள் வருவீர்களா!" என்ருர்.

"எங்கப்பாவுடனேயே இருக்கணும்னு ஆசையாயிருக்கு. அப்பறம் வரேன் மாமா!...நாங்கள் போய் எங்க மன்னியம்மாவைப் பாக்கவேண்டும். எல்லாருக்கும் என்நமஸ்காரம் சொல்லுங்கோ!"... என்று கூறி விடைபெற்ருள். எல்லோரும் மனம் பதைக்க வேகமாய் ரயிலேறினுர்கள்.

நல்ல நடுநிசி சமயம்; எல்லோரும் வந்து சேர்ந்தார்கள். மதுரத்தின் புலம்பலும் பிதற்றலும் ஓய்ந்தபாடில்லை. "குழந்தைகள், குழந்தைகள் வந்தார்களா! கிருஷ்ணு!" என்று கூப்பிடும்போதே இவர்கள் போய்ச் சேர்ந்தார்கள். அந்த பரிதாபத்தைக்கண்டு சகிக்காத கிருஷ்ணன் "மன்னி! மன்னி!" என்று கதறியவாறு அவள் படுக்கையருகில் சென்ருன்.

குழந்தைகள் "மன்னிம்மா! மன்னியம்மா! இதோ வந்துட்டோம் பாரு. நாங்க தெரியல்லே மன்னியம்மா!" என்று கண்ணீர் உதிர்த்து விம்மி விம்மி யழுதவாறு, ஸரஸ்வதி மதுரத்தின் மீது பாய்ந்து கட்டிக்கொண்டாள். இந்திரப் பதவியும் ஸ்வர்க்கப்பதவியும் கிடைத்திருந்தால்கூட மதுரம் இவ்வளவு சந்தோஷத்தையடைந்திருக்கமாட்டாள். கண்களை மலர விழித்து தன் இதயத்தில் கொந்தளிக்கும் உணர்ச்சி வெள்ளம் பொங்கிவழிய குழந்தைகளையும் கிருஷ்ணனையும் பார்த்தாள். குழந்தைகளைக் கட்டி அணைத்துப் பல முத்தங்களையிட்டாள்.

பிறகு 10 நிமிடம் ஒரே மவுனம் குடிகொண்டதுபோல் இருந்தாள்.

பிராணன் போய்விட்டதோ என்றும் சந்தேகம் உண்டாகி விட்டது. பின்னும் சற்று நேரம் சென்று மீண்டும் கண்ணைத் திறந்தாள். "கிருஷ்ணு! நீயா அழுகிருய்? எனக்கா அழுகிருய்? மாசிலா மாணிக்கத்தைத் தாரைவார்த்தபிறகு இந்த அல்பப் புழுவுக்கு அழுகையா!...அழாதே...என் தூர நிற்கிருய்? எங்கப்பாவின் புனர்ஜன்மத்தில் அவர் கண்கள் பரிசுத்தமாகிவிட்டன. அவர் உன்னை இப்போது என் குழந்தையாக நினைக்கிருர். என்னருகில் வா...கிருஷ்ணு. வா....அருகில் வா...என் இந்த தயக்கம்?"...என்று திடீரென்று ஏக வசனத்திலைழைத்தாள்.

கிருஷ்ணன் ஒன்றுமே தோன்ருது பிரமை பிடித்தவன்போல் "மன்னி! என் தாயே! மகாபாவியாகிய என்னுடைய துரதிருஷ்டந்தான் உங்களையும் நோய் பீடிக்கிறது. எனக்கொன்றுமே தெரியவில்லையே! ஆகாயமும் பூமியும் ஒன்ருகச் சுற்றுகிறது...இதயம் துடிக்கும் துடிப்பைத் தடைசெய்யவே முடியவில்லை. மன்னி! மன்னி!...என் இப்படிப் பார்க்கிறீர்கள்?" என்று புலம்பியவாறு கேட்டான்.

மது:—என் பார்க்கிறேனு! கிருஷ்ணு! நான் துரோகி. நம்பகத் துரோகி. என்னருமை பங்கஜத்திற்கு சாகுந்தறுவாயில் செய்த பிரமாணத்தை நிறைவேற்ருத மோசக்காரி...கிருஷ்ணு! என்னுடைய குற்றம் மாத்திரமல்ல. சமூகம்....சமூகம். மாற்ருந்தாய்க் கொடுமை...விதவை என்கிற புசல்காற்று, ஆதரிக்க யாருமேயில்லை என்கிற திக்கற்றதன்மை...வித்யாதேவியும் நிராகரித்த பரிபவம். சொந்தமான புத்தியில்லாது கேட்பார் வார்த்தைக்குப் புத்தியைப் பறிகொடுத்துத் தவித்த என் தகப்பனரின் பேதைத் தன்மையின் பயங்கரம், உடன்பிறந்தும் பகைவனைப்போல் விலகி நின்று வேடிக்கைப் பார்க்கும் தமையனின் விசித்திரமான ஸ்வபாவத்தின் சீர்கேடு எல்லாம் ஒன்றுகூடி என்னை வாட்டி வதைத்துப் பிரமாணத்தையும் கைவிடச் செய்துவிட்டன. இது சத்தியமான வார்த்தை. கிருஷ்ணு! நீ இதை நம்புகிருயா, இல்லையா?...சொல்லு....சொல்லு.

கிரு:—(புலம்பிக்கொண்டே)...மன்னி! நீங்கள் பரிசுத்தாத்மா. சத்தியமாக உங்கள் வார்த்தையை நான் நம்புகிறேன். குழந்தைகளின் புலம்பலைப் பாருங்கள். இப்போது இந்த பேச்செல்லாம் வேண்டாம். நீங்கள் ஒரு குற்றமும் செய்தவர்களல்ல. கடவுள் மீது ஆணையாக நீங்கள் நிர்த்தோஷி. உங்களுக்கு மனக்கவலையே வேண்டாம். மன்னி! சற்று ஓய்வுகொண்டு பேசாதிருங்கள்.

மது:—(படபடத்த குரலில் பேசத் தொடங்கி) கிருஷ்ணு! என்னை ஓய்வுகொண்டு படுக்கச் சொல்லிவிட்டு நீ ஓடிவிடப் பார்க்

கிருயா! முடியாது. முடியாது! நீ என் குழந்தை. என் கட்டை இருக்கும் வரையில் நீயும் குழந்தைகளும் என்னை விட்டுப் பிரியக் கூடாது...கூடவே கூடாது....பிரிவதில்லை என்று சத்தியம் செய்து கொடு....உம்...சத்தியமென்ன, பிரமாணமென்ன?....என் சட்டம் இது. நீ பிரியக்கூடாது. இப்பாழும் உடலை உன் கையால் எடுத்துக் கொளுத்தவேண்டியது உன் கடமையல்லவா?...

இதற்குள் டாக்டர் வந்தார். அவர் மதுரத்தைப் பார்த்துவிட்டு "எல்லோரும் கூட்டம் போடக்கூடாது. பூர்ண ஓய்வு கொடுக்க வேண்டும். சடசடவென்று பேசினால் இதயம் பலஹீனப்படுகிறது. எல்லோரும் தூரப்போங்கள். அவர்களுக்கு மிகவும் பிரியமான இரண்டொருவர் மட்டும் பக்கத்தில் இருந்தால்போதும். இப்போது ஊசி குத்துகிறேன். நன்றாகத் தூங்குவார்கள். பிறகு நாளை வருகிறேன்" என்று கூறி ஊசி குத்திச் சென்றார்.

பிரியமான இரண்டு குழந்தைகளும் மதுரத்தைவிட்டு அகலவே இல்லை. மயக்கமாக மதுரம் படுத்திருந்தாள். மத்தியில் தன் தகப்பனைக் கூப்பிட்டு "அப்பா!....கூடப்பிறந்த பாசத்தின் வேகம் என் மனத்தில் போராடுகிறது. உங்கள் பிள்ளையைப் பார்த்து எத்தனையோ வருடக்கணக்காகிவிட்டது பார்க்கவேண்டும்போல் ஆசை தூண்டுகிறது. தயவு செய்து ஒரு தந்தியடியுங்கள். "கடைசிமுறை பார்க்க விரும்புகிறாள்' என்று அடியுங்கள். வந்தால் வரட்டும். இல்லாவிட்டால் கிடக்கட்டும்" என்று சற்று அதிகார தொனியில் கூறினாள்.

உடனே நடராஜன் தந்தி யடித்துவிட்டான். துர்ப்பாக்கிய வதியின் வாழ்நாளில் எப்படியோ பின்னும் இரண்டு நாட்கள் கடந்துவிட்டன. ருத்திராக்ஷப் பூனையும் வருந்தி கண்ணீர்விடுகிறாள் என்றால் மற்றவர்களைக் கேட்கவேண்டுமா! குழந்தைகளோ, ஸ்வாமி படத்தருகில் சென்று நின்று "ஸ்வாமி! எங்க மன்னியம்மாவுக்கு உடம்பை சீக்கிரம் குணப்படுத்திவிடேன். எங்க மன்னியம்மா ரொம்ப நல்லவளாச்சே, அவளுக்கேன் வ்யாதி படுத்துகிறது? அவளுக்குக் கஷ்டமாயிருக்காதா! ஸ்வாமி! சுப்ரமண்யக் கடவுளே! சீக்கிரம் குணப்படுத்திவிடு" என்று வேண்டுகிறார்கள்.

மதுரம் படபடத்த குரலில் "அப்பா!...சித்தி! இங்கு வாருங்கள். இப்படி உட்காருங்கள். நேற்றிரவு நான் சொல்லியதெல்லாம் ஞாபகமிருக்கிறதா? இனி அந்த சத்தியத்தை மீறமாட்டீர்களே?" என்று அதட்டலாய்க் கேட்டாள். நடராஜனுக்கு வாயே அடைத்துவிட்டது. சின்னம்மாளோ, விக்கி விக்கி அழுகிறாள். "தட்டமாட்டேன். சத்யம் செய்தது செய்ததுதான். மதுரம்! நான் முன்பிருந்த ராக்ஷஸ சின்னம்மாளில்லை. உன்னால் புனர் ஜென்மம் எடுத்தவள்" என்று புலம்பிக்கொண்டே கூறினாள்.

நடராஜன் மதுரத்தின் கைகளைப்பிடித்துக்கொண்டு முகத்தோடு முகம் பதித்து, "மதுரம்! மகாபாவி என் வயிற்றில் பிறந்த உன்னை நானே கொலைசெய்துவிட்டவன் போலாகிவிட்டேன். என் துக்கம் தீராது, ஆறாது. என் பாவிக்கண்ணால் கண்டதெல்லாம் போதாதென்று...அதற்குமேல்பேசமுடியாது புழுவாய்த்துடித்தான்.

மது :—அப்பா! அழாதேங்கோ....சாம்பமூர்த்தி வந்தானா? பார்த்தீர்களா! நான் நன்றாக இருந்து வேலை செய்வதற்கு வேண்டுமானால் உபயோகப்படுவேன். இனி அவனுக்கெதற்கு? அவன் கிடக்கிறான். தடியன்... கண்ணா ஸரஸ்வதி!...பார்வதீ...தூங்குங்கோம்மா! மணியாகிவிட்டது...கிருஷ்ணா!....கிருஷ்ணா!...எங்கே இருக்கிறாய்...தெரியவில்லையே...

கிரு :—மன்னி! இதோ இருக்கிறேன்...

மது :—கிருஷ்ணா...நான் யாரு...உண்மையைச் சொல்லு.

கிரு :—நீங்கள் என்னைப் பெத்த தாயார்...எனது ஞானகுரு...

மது :—ஆகா....என்ன ஆனந்தகரமான வார்த்தை! என்னிதயம் பூராவும் அமிருதம் தேங்கிவிட்டது. கிருஷ்ணா!....உன் தாயார் வார்த்தை எதுவாயினும் நீ தட்டக்கூடாதல்லவா...

கிரு :—சத்யமாகத் தட்டவேகூடாது. 'தாய்சோல் துறந்தோரு வாசகமில்லை' என்பதை நான் மறக்கவில்லையே...

மது :—என் உள்ளம் உணர்ச்சி வெள்ளத்தால் பொங்கியது. உடல் பூரித்தது. சஞ்சலம் அகன்றது...கிருஷ்ணா!...கிருஷ்ணா! எங்கே உன் கைகளைக்கொடு...நான் உன் தாயாரல்லவா! இப்படி வா...என்னருகில் வா...என்று கண்களை ப்ரகாசமாகத் திறந்துகொண்டு கைகளை நீட்டி அழைத்தாள்.

சிறு குழந்தையைப்போல் கிருஷ்ணன் தேம்பித் தேம்பி யழுதுகொண்டே மதுரத்தின் சமீபம் வந்து கைகளைக் கொடுத்தான். மதுரம் ஆவலே வடிவாக அக்கைகளைப் பற்றிக் கண்ணில் ஒத்திக்கொண்டு "கிருஷ்ணா! என் வார்த்தையைத் தட்டுவதில்லை என்று செய்த சத்தியம் ஆண்டவன் மீது ஆணையானது...இதோ! இதோ! இந்தா! என் வாக்கை நிறைவேற்று. இந்த கரங்கள் இனி உன்னுடைய சொந்தக் கரங்கள். உன் பங்கஜம் இறக்கவில்லை. புனர் ஜென்மம் பெற்று வந்துவிட்டாள் என்று நிச்சயமாக நம்பு. என் ஆத்மாவுக்குக் கடைசீ காலத்தில் நிச்சலமான ஆனந்தத்தைக்கொடு இந்தா! பிடித்துக்கொள்" என்று கூறியபடியே தன் தலைமாட்டில் உட்கார்ந்திருந்த கண்ணம்மாளின் கைகளைப் பிடித்து கிருஷ்ணனின் கைகளில் வைத்துத் தன் கைகளால் இறுகப்பிடித்துக்கொண்டாள்.

இம்மாதிரி நடக்குமென்று கிருஷ்ணன் கனவிலும் கருதவில்லையாதலால் முதலில் தூக்கிவாரிப்போட்டது. அவன் இதயத்தில்

செய்யாத சித்திரவதை செய்து வாட்டியது. தீயை மிதித்தவன் போல் துள்ளினன். "மன்னீ! மன்னீ! இதென்ன காரியம்... நான் சன்யாசியாயிற்றே....இந்த கட்டைக்கு...

மதுரம் இடைமறுத்து "கிருஷ்ணு! உன் தாயாருக்குக் கொடுத்த ப்ரமாணத்தை மீறப் பார்க்கிருயா! இதுவரையில் நீ வீர வைராக்ய சன்னியாசிதான்; இல்லை என்று நான் கூறவில்லை. இந் நிமிடத்துடன் அது முடிந்தது. இனி நீ இல்லற தர்மத்தை யனுஷ் டிக்கும் சம்சாரி. கிருஷ்ணு! என்னுடைய சரித்திரமே உனக்குப் பலவித பாடங்களைக் கற்றுக்கொடுத்திருக்குமல்லவா! ஒரு இளம் விதவை...பால் மணம்மாருத பச்சிளங்குழந்தையை சமூகம் என் னென்ன கொடுமைகள் செய்து ஆட்டியது என்பதை மறந் தாயா! அந்த கஷ்டமெல்லாம் இந்தக் கட்டையோடு மறையும். என் னருமை கண்ணம்மாளுக்கு தற்கால உலகப்போக்கின்படி விமோ சனம் உண்டாகட்டும். ஒரு பரதேசி ஆத்மாவைக் காக்கும் புண் ணியம் உன்னைச் சேர்ந்தது.

கிருஷ்ணு! என்ன யோசிக்கிருய்? என் சிறிய தாயார் வயிற் றில் பிறந்தவளாயிற்றே என்று கவலையா!...இல்லை. இல்லை. என் கண்ணம்மாள் அத்தகைய பிடாரியில்லை. அவளே பங்கஜம் என்று நினைத்துக்கொள். குழந்தைகளின் சம்மதத்தையும் கேட்டுவிட்டேன். என் பெற்ருேர்களின் அனுமதியும் பெற்றேன். கண்ணம்மாவின் பரிபூர்ண த்ருப்தியையும் தெரிந்துகொண்டுதான் நான் இதில் ப்ர வேசித்தேன். கையை விடாதே. கிருஷ்ணு! உன் தாயின் மரணத் தறுவாயின் விருப்பத்தை நிராகரிக்காதே...

கிரு:—மன்னீ!...மன்னீ!....என்...

மது:—(இடைமறுத்து) அம்மா என்று வாயாரக் கூப்பிடு கிருஷ்ணு! மன்னி இல்லை. அவள் இறந்தாள்....என் வார்த்தை யைத் தட்டுக்கட்ட உன்னல் முடியாது. இதுவரையில்தான் குழந் தைகள் குழந்தைகளாக ஆசிரமத்தில் வளர்ந்தார்கள். இனி அம் மாதிரி விடுவது நியாயமில்லை. திக்கில்லாவிட்டால் ஒருவாறு ஒப் புக்கொள்ளலாம். பெண் குழந்தைகளை இனி நீ உனது ஆதீனத்தில் வைத்துச் சரியானபடி வளர்த்துக் காப்பாற்று. ஸரஸ்வதியை நாகலக்ஷ்மி மாமியின் மகன் மூர்த்திக்கு நானே நிச்சயம் செய்து விட்டேன். பார்வதியை அவர்களின் தங்கை மகனுக்குப் பேசி விட்டேன். வரனும் சரியாகிவிட்டது. வளர்த்து விவாகம் செய் வதுதான் உன் பொறுப்பு. கிருஷ்ணு!...கிருஷ்ணு! கண்ணம்மா!... இருவரும் சேர்ந்து என்னெதிரில் நின்று ஆனந்தக் காக்ஷியைக் கொடுங்கள். எங்கே?" என்று ஆவலே வடிவாய்க் கேட்டாள்.

அதற்குமேல் கிருஷ்ணனல் எப்படி மறுத்து பதில் சொல்ல முடியும்? இருவரும் கண்களில் நீர் தாரைதாரையாய்ப் பெருகிய

வாறு ஒன்றாக நின்றார்கள். இருவரையும் இதய பூர்வமான அன்புடன் தடவிக்கொடுத்து இன்பச் சிரிப்புச் சிரித்தாள். "கண்ணா !... உன் தாயாரைப்போல் நீ இராமல் பங்கஜத்தைப்போல் குழந்தைகளை நடத்து. அப்போதுதான் பகவான் உனக்குப் பரிபூர்ண கிருபை செய்வார்...அதோ...குழந்தைகள் வருகிறார்களே...ஸரஸ்வதீ...... கண்ணாட்டீ!...இதோ உங்கம்மா பாத்தயா! இனிமே உங்களுக்கு அம்மா, மன்னியம்மா எல்லாம் இவதான்....தெரியுமா?.... சரிதானே" என்றாள்.

குழந்தைக்கு ஒன்றும் தோன்றவில்லை. எனினும் சந்தோஷம் ஒரு பக்கம் பொங்கியது. "அப்பா! அம்மா!"...என்று ஏக காலத்தில் கூவினாள். கண்ணம்மாள் இரு குழந்தைகளையும் சேர்த்தணைத்து முத்தமிட்டுக் கண்ணீர் உதிர்த்தாள். "அப்பாடா!...இதுதான் என்னுடைய இறுதியான ஆனந்தம்...இதைக் காணத்தான் நான் சில மாதகாலமாய் இரவு பகல் ஏங்கி யோசித்துக்கொண்டிருந்தேன். என் மனோரதம் ஆதிமுதல் எல்லாம் தோற்றுப்போய் விடினும் இதையாவது பூர்த்தி செய்த பகவானுக்கு என் வந்தனங்கள் அர்ப்பணம். அவன் உங்களை எல்லாம் ஆதரிப்பானாக. கடவுளுக்கும் சத்தியத்திற்கும் மனச்சாக்ஷிக்கும் கட்டுப்பட்டு நடவுங்கள். தேசத்திற்கு எல்லோரும் சேர்ந்து பாடுபடுங்கள். சமூக சீர்திருத்தத்திற்காக ஆயுள் பூராவும் உழையுங்கள். சமூகத்திலுள்ள கொடுமைகளை தைரியமாகக் களைந்தெறியுங்கள். இதுதான் என் இறுதிவார்த்தை...பகவான் உங்களுக்குத் தீர்க்காயுளையும் குறைவற்றசெல்வத்தையும் நோயற்றவாழ்வையும் கொடுத்துரக்ஷிப்பாராக.

"பாட்டீ !......இனிமேல் நீ புதுப்பாட்டி...கொடுமையற்ற பாட்டி. கண்ணம்மாளுக்குப் பெருந்துணையாயிருந்து உதவிசெய்து குழந்தைகளைக் காப்பாற்று. சென்றதுபோக இனியாவது நன்மையைத் தேடிக்கொள்ளு" என்று படபடத்துக் கூறினாள்.

ஆயாஸம் மேலிட்டால் சற்றுமீண்டும் மவுனம் சாதித்தாள். பின்னும் சற்று சென்று தெளிவு வந்தது. மீண்டும் ஒரு முறை கிருஷ்ணன், குழந்தைகள், தங்கை எல்லோரையும் கண்ணைக் கொட்டாமல் பார்த்தாள்...நாகலக்ஷ்மியின் கைகளைப் பிடித்துக்கொண்டாள். "மாமீ! இந்த புண்ணியங்கள் முற்றும் உங்கள் குடும்பத்திற்கு குடைபோல் காக்கும். உங்களைப்போன்ற நல்லவர்கள் உலகிலே இல்லை மாமீ!" என்றாள் அதற்குமேல் பேசமுடியவில்லை.

உண்மையில் மற்றெல்லோரையும்விட மதுரத்தின் குணத் தருமையை நாகலக்ஷ்மிதான் நன்றாக அறிந்தவள். ஆகையால் உடன்பிறந்த சகோதரியைப்போலவே எண்ணிக் கண்ணீர் விட்டாள். எங்கும் நிச்சப்தம் குடிகொண்டது. ஊரே உரக்கத்தி லாழ்ந்தது. சிறு சப்தமும் ஒடுங்கி பயங்கரமான இருள் சூழ்ந்தது.

## வரண்ட இதயத்தில் வாஞ்சைப் பெருக்கு

சிறு சப்தமும்ஒடுங்கி பயங்கரமான இருள் சூழ்ந்தது. ஊரே உரக்கத்திலாழ்ந்தது. எங்கும் நிச்சப்தம் குடிகொண்டது. அச்சமயம் இரண்டு ஆத்மாக்கள் மட்டும் தூங்கவில்லை. "உடம்பு என்ற தந்தி உண்மையாக இருக்குமென்று எனக்குத் தோன்றவில்லை. இம்மாதிரி சாக்குச் சொல்லி வரவழைத்துப் பணம் பறிக்கலாமென்று உங்கப்பாவும் அந்த சித்திராங்கி சின்னம்மாளும் செய்த சூழ்ச்சியோ என்னவோ! யார் கண்டார்கள்?" என்றாள் சாம்பமூர்த்தியின் மனைவி.

பெண்டாட்டி சாமியாராகிய சாம்பமூர்த்தி, "இருந்தாலும் இருக்கலாம்; எனக்கும் புரியவில்லை. அந்த மனுஷ்யனுக்குப் பயித்தியம் பிடித்து ஆஸ்பத்திரியில் கிடந்தாலும்....அந்த பயித்திய சேஷ்டையினால் எழுதினானோ என்னவோ! நானும் குழம்பிக்கொண்டுதான் போகாதிருக்கிறேன். ஒன்று செய்யலாமா என்று தோன்றுகிறது. அந்த ஊர் பள்ளிக்கூடத்து ஹெட்மாஸ்டருக்குக் கடிதமெழுதி பதில் பார்க்கலாமா என்று தோன்றுகிறது" என்றான்.

இந்த பிரகஸ்பதியின் யோசனையை ஆதரித்து மனைவி உத்திரவு கொடுத்தாள். உடனே அந்த நள்ளிருளில் ஒரு கடிதம் தந்திரமாய் எழுதி மனைவிக்குப் படித்துக் காட்டினான். பிறகு எப்போது உதயமாகுமென்று எதிர்பார்த்திருந்து தபாலில் போட்டுவிட்டான். என்னே சகோதர வாஞ்சை! என்னே உலகத்தின் மாயை! உடன் பிறந்த பாசமும்மா ஒட்டி உலர்ந்து போய்விடும்? அதே மதுரம் இருக்கவேண்டிய நிலைமையில் ஒழுங்காக இருந்தால் அப்போது மட்டும் அன்பு இருந்தாலும் இராவிட்டாலும் உலர்ந்துபோகாது உறவாடுவானல்லவா?

இடையில் நான்கைந்து நாட்கள் ஓடி மறைந்துவிட்டன. சாம்பமூர்த்திக்குப் பதில் வந்தது: படிக்கத் தொடங்கினான்.

"சாம்பமூர்த்தி! உன்னுடைய தந்திரமான கடிதத்தின் விஷமத்தனம் எனக்குத்தெரியும். ஒரு சமாச்சாரமும் தெரியாதுபோல், எங்கப்பா எங்கிருக்கிறார் என்று கதையா அளக்கிறாய்? உங்கப்பா உனக்கு எழுதிய கடிதங்களெல்லாம் எனக்குத் தெரியும். மதுரத்திற்கு உடம்பு என்று கேள்விப்படுவது உண்மையா என்று எழுதியிருக்கிறாய்? மதுரத்தின் பிராணபத்திலும் உடன்பிறந்த உன்னைப்பார்க்க அவள் பதறினாள். உன் அப்பாவின் விருப்பப்படி அந்த விஷயத்தைத் தந்தியடித்தது நான்தான்.

பெத்த தகப்பன், பிறந்த பிறப்பு என்கிற பாசம் சிறிது மற்று உன் உத்தியோக தோரணையில் இன்று நீ உன் மனைவியின் போதனையால் இருமாப்புக்கொண்டிருப் பதைக் கடவுள் ஒருபோதும் சகிக்கமாட்டார்.

உலகத்தில் ஒரு மனைவி இறந்தால் அவன் மறுமனைவி யைக் காணலாம். தகப்பனும் தாயும் இறந்தால் அவர்களை ஏழேழு பிறப்பிலும் காணமுடியாது. அதேபோல் உன் தாய்வயிற்றில் உன்னுடன்பிறந்த ஒரேசகோதரியை நீ ஓர் ஊழியக்காரியாய் மதித்து அகம்பாவம் பிடித்து எண்ணி இருந்த கனவும் இனி காணமுடியாது. மதுரம் என் ெருரு துரதிருஷ்ட பிம்பம் உலகில் படாத துன்பத்தையும் பட்டு பெற்ற அப்பனாலும் உடன்பிறந்த அண்ணனாலும் அவமதிக்கப்பட்டு ஊமைப் பிராணனுடன் உலகிலிருந்த தும் மறைந்துபோய் மூன்று நாட்களாகிவிட்டன. இனி நீ ஒரு காலத்தில், உடன்பிறப்பு இருந்தும் ஒண்டியாய் நினைத்தபடி, ஒண்டிக்கட்டையாகிவிட்டதை எண்ணி ஒரு சொட்டுக் கண்ணீராவது சிந்தாமலிருக்கமாட்டாய் என்பது நிச்சயம். உடன்பிறப்பற்ற பிறப்பு பாழ் என்ற பெரியாரின் வாக்கு பொய்க்காது. மதுரத்தை யொரு கருவியாகக்கொண்டு நீயும் உங்கப்பாவும் நடித்த நாடகம் முடிந்துவிட்டது. உங்கப்பாவுக்கு புத்திவந்தது. உனக்கு அது என்று வருமோ?

இங்ஙனம்,

சாமிநாதன்"

"என்ன! மதுரம் மறைந்துவிட்டாளா!"...என்று தனக்குள் ஒருதரம் சொல்லிக்கொண்டான். அதே தபாலில் வந்த இன்னொரு கடிதத்தை அவன் மனைவி படித்து "ஐயோ!" என்று அலறினாள்... தானாவிட்டாலும் தன் சதையாடும் என்கிறபடி அவனை யறியாது கண்ணில் மடமடவென்று ஜலம் சொட்டிவிட்டது. வயிற்றில் ஏதோ சங்கடம் செய்தது. ஆதியில் மதுரமும் தானும் குழந்தை யாயிருந்ததும் பள்ளிக்கூடம் சென்றதும், சின்ன விஷயங்களுக்கெல் லாம் சண்டை போட்டதும், தன் தாயார் சமாதானம் செய்ததும், மதுரத்தின் பொம்மைக் கல்யாணமும், பிறகு நேர்ந்த துக்க சம்பவ மும், தன் தாயார் சாகும்போது மதுரத்தைக் கைவிடாதே. என்று தன்னிடம் கூறியதும்...ஒன்றுவிடாமல் சினிமாப் படம்போல் கண் முன்பு சுழன்று, மதுரத்தின் சவமும் கண் முன்னால் தோன்றி யது. தலை சுற்றுவதுபோல் ஒரு வேதனை யுண்டாகியது. அதே சம யம் மனைவி "ஹா!" என்று அலறியதைச் சரியாய் கவனிக்கவும் முத லில் தோன்றவில்லை. பிறகு கவனித்து என்னவென்று கேட்டான்.

அவள் ப்ரமாதமாக புலம்பிக்கொண்டே "ஐயோ! என் ஒரு உடன்பிறந்த சகோதரிக்கு உடம்பு சரியில்லையாம். டாக்டர்களெல்லாம் கைவிட்டுவிட்டார்களாம். ஒரே தத்தளிப்பில் இருக்கிறதாம். நான் இப்போதே நேரில் காரில் போகிறேன். உயிருடனுவது முகத்தைப் பார்ப்பேனே! என்னதிருஷ்டம் எப்படியோ?.... ட்ரைவர்!...காரை எடு. குமாஸ்தா எங்கே கூப்பிடு. வீட்டைப் பார்த்துக்கொள்ளுங்கள். நான் போகிறேன்" என்று அதிகார தோரணையிலேயே கூறிப் புலம்பிக்கொண்டே கிளம்பிவிட்டாள்.

அதுவரையில் மரக்கட்டைபோலிருந்த சாம்பமூர்த்திக்கு அப்போதுதான் ஒரு சிறிது எரும்பு கடிப்பதுபோல் மனத்தில் பொத்தியது. "எனக்கு வந்த கடிதத்தின் விஷயத்தைக்கூட இன்னதென்று கேட்க மனமில்லாது தன் சகோதரியின் உடம்புக்காக உடனே கிளம்புகிறுளே! ஆகா...நானல்லவா மூட்டாள்? எனக்கும் இப்படித்தானே இருக்கவேண்டும்? என்ன அநியாயம்!" என்று தோன்றியதும் அவன் மனம் சடக்கென்று மாறியது. அவனையறியாத சங்கடம் செய்தது..."சீதா! உன் சகோதரிக்கு ஒருகால் குணமடைந்து நீ சந்தோஷப்பட்டாலும் படலாம். என் மதுரம் இப்பாழும் உலகத்தைவிட்டு மறைந்து மூன்று நாட்களாகிவிட்டன. இனி வேலைக்காரியாக பாவிக்கக்கூட எனக்கு ஒரு உடன்பிறந்தாள் இல்லை. ஆகையால் நான் உடனேபோய் என் தகப்பனுரைப் பார்க்கவேண்டும். நீ ரயிலில் போ! நான் காரில் போகப்போகிறேன்" என்றுன்.

அதற்கு முன்பு காணுத ஆத்திரம் அந்தம்மாளின் முகத்தில் உண்டாகியது. "ஓகோ! குழந்தையுங் குட்டியும், புருஷனும், பணமும் பாக்யமும் தாண்டவமாடிய ஸ்ரீமகாலக்ஷ்மியே இறந்துவிட்டாளோன்னே! இதற்கு அழுகைவேறு. உபசாரத்திற்கு மோட்டாரில் போகும் ஓய்யாரம் வேறு! என்னமோ உதவாக்கரை மொட்டையொன்று உலகபாரமாய் உலாவியது. அதன் கஷ்டம் நீங்கி ஆண்டவன் அழைத்துக் கொண்டதற்குச் சந்தோஷமல்லவா படவேண்டும்? மதுரம் செத்ததற்கு அழுகையாவருகிறது. போதும் சவரணை. ட்ரைவர்! காரை எடுத்தாயா! வீடு ஜாக்ரதை. குழந்தைகள் பள்ளிக்கூடத்திலிருந்து வந்ததும் ஜாக்ரதையாய் பார்த்துக்கொள்ளுங்கள். மதுரம் செத்தால் காடெல்லாம் எலும்பாகிவிடவில்லை" என்று கூறிக்கொண்டே புருஷன் என்கிற மரியாதையற்று பதிலையும் எதிர்பார்க்காமல் விர்ரென்று காரில் ஏறிப்போய்விட்டாள்.

என்ன ஆச்சரிய நாகரிகம்!...இப்போதுதான் சாம்பமூர்த்தியின் முழுமுட்டாள்தனமும் பெண்டாட்டிச் சாமியாராகவிருக்கும் வெட்கக்கேடும் நன்குகத் தெரிந்ததோடு அவள் கூறியவார்த்தைகள் முள்ளு குத்துவதுபோல் சுருக்கென்று குத்தின.

முகத்தில் அசடுவழிகிறது. தன் முகத்தையே தன்னால் பார்க்க முடியவில்லை. "என்னையும் பயித்தியமாக அடித்துத் தன்னரசு புரிந்து மோட்டாரிலா சென்றுவிட்டாள்...இருக்கட்டும். சீச்சீ! முட்டாளே! உன்னை நன்றாகச் செருப்பாலடிக்கவேண்டும். உன்னுடைய மதிப்பை நீதானே குலைத்துக்கொண்டாய். ஏன் உன் மக்களின் பாசத்தை நீ யறியாது ஏமாந்தாய்?" என்று தன்னையே தான் நொந்துகொண்டான். பித்தன்போல் திரிந்தான். ஒன்றுமே தோன்றவில்லை.

அவன் எத்தனை விலக்க முயன்றும் மதுரமும் தானும் பாலியத்தில் விளையாடிய காக்ஷியும், சண்டையிடும் காட்சியும் அவனால் மறக்கவே முடியவில்லை. விலக்கிப் பார்க்கப்படும் பிரயாசையில் அதிகமாகத் தெரியவாரம்பித்தது. இதுகாறும் சாக்ஷாத் தேவதைதான் தன் மனைவி என்று எண்ணித் தன் மதிப்பையும் இழந்து சலாம் குலாம் போட்டு இருந்ததற்கு நேர்மாறாக அவள் இன்று சற்றும் பயமோ, அச்சமோ இல்லாது அலக்ஷியம் செய்ததுபோல் தன்னைப் பற்றித் தன் குமாஸ்தாவின் எதிரிலேயே பேசிவிட்டு அவனுடன் கூட நிர்ப்பயமாகத் தனியே துணிச்சலுடன் சென்றுவிட்ட செய்கைதான் அவன் மனத்தை யுறுத்தி அறுத்தது.

தன்னைத் துரோகம் செய்துவிட்டதுபோன்ற ஒரு உணர்ச்சி எப்படியோ அவனுடைய அடிமை இதயத்திலும் புகுந்துகொண்டது. தான் ஊருக்குச் சென்றால் தன்னைப் பார்ப்பவர்களெல்லாம் பரிகஸித்து நிந்திப்பார்களே! தகப்பன் தீராத ஆபத்தில் தவிக்கையில் அவரை எட்டிப் பார்க்கவில்லை. தங்கையின் மரணத்தறுவாயில் இருக்கையில் தந்தியடித்தும் இருமாப்புடன் போகவில்லை. இன்னொரு தங்கையின் புருஷன் இறந்தபோதும் போகவில்லை. இப்போது போனால் என்ன நினைப்பார்கள்? சேச்சே...போகக்கூடாது. கட்டாயம் போகக்கூடாது. போனால் அதைவிட அவமானம் வேறு இல்லை...

ஏன்...நான் செய்த அபசாரத்திற்கு அவமானப் படுவதால் என்ன குற்றம்? என் செய்கையின் பலன். அதுதான் முடிந்துவிட்டது. அப்பாவையும் இப்படியே பார்க்காது இழந்துவிட்டால்... அந்தோ! அப்போது நான் போய்த்தானே தீரவேண்டும். நான் தானே கர்மகர்த்தா! அப்போதும் நான் போகவில்லை என்றால் பிரஷ்டமல்லவோ செய்வார்கள்? எல்லாம் பெண் பிசாசுகளின் பேச்சைக்கேட்டு இப்படியாயிற்று. உம்...சுயபுத்தியிழந்த மூண்டமாகிவிட்ட என்னை நோகாமல் பிறரைச் சொல்வதில் லாபமென்ன? என்றெல்லாம் யோசித்து மூளையும் குழம்பிவிட்டது.

இப்படியே நாலைந்து நாட்களாய் விட்டன. விடியற்காலம் இவன் கார் பும்பும் என்று ஹாரன் கேட்டது. அடுத்த நிமிஷமே

ஏகப்பட்ட பேச்சுக் குரல் கேட்டது. தன் மனைவி அட்டகாஸமான குரலில், "பியூன்! அந்த அறையைக் காலி பண்ணு...படுக்கையை இப்படி கட்டிலில் விரி...டேபில் விசிறியை இப்படி வை. உம்... ஆச்சா ?...என்று கூறியது கேட்டது.

நோயாளியான சகோதரி, அவளுடைய இரண்டு கைக் குழந்தைகள், நோயாளிக்கு வேலை செய்ய ஒரு தாதி, தன் சிறியதாயார் ஆகியவர்களுடன் இங்கு வந்து சேர்ந்ததை யறிந்தான். சாம்பமூர்த்தியின் மனம் கலங்கி வயிற்றில் சங்கடம் தாங்கவியலாது செய்கிறது. உடனே குமாஸ்தாவை யனுப்பி பெரிய டாக்டரை அழைத்துவரும்படி தன் காரை யனுப்பினுள்.

"பார்லி வாட்டர் தயாராகட்டும். என் சிறிய தாயாருக்கு கோதுமை சாதம் பண்ணு. தாதிக்குப் புழுங்கலரிசி சாதம் பண்ணு. குழந்தைகளுக்குக் காரமில்லாது ரசம் வை" என்றெல்லாம் ஆர்டர் சமையல்காரனுக்குக் கொடுத்தாள். வீடு தடபுடல் படுகிறது. கார் சென்று திரும்பிவரும் ஹாரன் கேட்டது.

இதுவரையில் தன் புருஷன்வந்து தன் சகோதரியை விசாரிக்க வில்லையே, தானே டாக்டரை யழைத்துவந்து உபசரிக்கவில்லையே என்ற கோபம் வந்துவிட்டது.

முகத்தைக் கடுவான் பூனையைப்போல் வைத்துக்கொண்டு சாம்பமூர்த்தி இருக்கும் அறைக்கு வந்தாள். "என்ன இது இன்னும் தூக்கம் முழிக்கவில்லையா! செல்லத்தை அழைத்துவந்திருக்கிறேன். பெரிய டாக்டரை அழைத்துவர ஆளனுப்பினேன். அதோ கார் வந்துவிட்டது. வீட்டிற்கு வந்தவர்களை விசாரிக்க வேண்டாமா! எழுந்து வாருங்கள்" என்று ஆர்பாட்டமாகச் சொன்னுள்.

சாம்பமூர்த்தி ஒரு காலத்தில் இந்த அதிகார தேவதை வாயில் வரும் எந்த வார்த்தைகளையும் தேவ வாக்காகவும் அமிருதமாகவும் எண்ணி இருந்ததற்கு நேர்மாறுக அவன் வயிறெரிந்தது. முகத்தைக்கொடுத்து பதில் பேசவில்லை. "எந்த தைரியத்துடன் அழைத்து வந்தாயோ, அப்படியே நடத்திக்கொள்ளலாம். நீ அதிர்ஷ்டசாலி. தங்கையின் அருமை தெரிந்தவள். நான் நிர்ப்பாக்யவான் தங்கையைப் பறி கொடுத்தவன். நான் வந்து பார்த்தால் உன் தங்கையும் செத்துப்போய் விடுவாள். போ...போ" என்றுன்.

இதற்குள் டாக்டர் டாக்கு டக்கு என்று வரும் பூட்ஸ் ஓசைக் கேட்டது. அந்த பரதேவதையின் மனது கொதித்தது. உருமிக்கொண்டே உள்ளே வந்துவிட்டாள். டாக்டர் பார்த்தாயிற்று. அவருக்கு பில் 16 ரூபாய் பர்ஸிலிருந்து எடுத்துக்கொடுத்து விட்டாள். தன் தங்கையை வந்து விசாரிக்காது அலக்ஷியம் செய்த

புருஷன் மீது வந்த கோபத்திற்கு எல்லேயே இல்லே. அதை அவள் லக்ஷியமே செய்யவில்லே.

பார்த்தான் சாம்பமூர்த்தி; அவனுல் ஒன்றும் சகிக்கமுடிய வில்லே. உடனே ஒரு யோசனே செய்தான். பாங்கி கணக்கைக் குளோஸ் செய்துவிட்டு மருந்து ஷாப்பு, மளிகைக்கடை, பெட் ரோல் பங்கு முதலிய எல்லாவற்றிற்கும் என் கையெழுத்தில்லாது கொடுக்கும் சாமான்களுக்கு நான் ஜவாப்தாரியல்ல'' என்று கடி தம் எழுதிவிட்டான். இதுகாறுமிருந்த குமாஸ்தாவை டிஸ்மிஸ் செய்துவிட்டான்.

அவன் மனம் இத்தனே சடிதியில் இப்படி மாறியதன் ஆச்சரி யத்தை அவனுலேயே நம்பமுடியவில்லே. எப்போ்ப்பட்ட பகையும், த்வேஷமும் ஒரு சட்டி நெருப்புடனே ஒரு சட்டி பருப்புடனே சமாதானமாகிவிடும் என்பது பெரியவர்களின் வாக்கு. அதேபோல் சாம்பமூர்த்தியின் மனம் மதுரத்தின் மறைவாலும் மனேவியின் மித் திரபேதத்தினுலும் அவனே யறியாது மாறிவிட்டது. ஆபீஸுக்கு லீவு எழுதிவிட்டு வீட்டில் சொல்லாமல் கிளம்பிவிட்டான். எங்கு போகிறோம் என்ன செய்கிறோம் என்றே அவனுக்குத் தெரிய வில்லே. மனங்குழம்பித் தத்தளிக்கிறது. சகிக்கமுடியாத சங்க டத்தினுல் துவண்டுவிட்டது. பித்தன்போலாகிவிட்டான்.

## 37

### அறிவு உதயம்—ஆனந்தக் கூட்டம்

பித்தன்போலாகிவிட்டான். சகிக்கமுடியாத சங்கடத்தினுல் துவண்டுவிட்டது. மதுரத்தின் பிரிவினுல் கிருஷ்ணனும் குழந்தைகளும் மிகவும் கேவலமாகிவிட்டார்கள். குழந்தைகள் பங்கஜத்தை இழந்தபோது விவகாரம் புரியாதிருந்தன. இப் போதோ, அவர்களேச் சமாதானம் செய்யவே முடியவில்லே. கண் ணம்மாள் தான் எத்தனேயோ அன்புடனும் ஆதரவுடனும் அவர் களேத் தேற்றி வந்தாள். நடராஜனே கிருஷ்ணனுக்கு ஆறுதல் கூறுவ தென்ருல் கிருஷ்ணனின் துயரம் எப்படித்தானிருக்கும்.

அவனுடைய தாயார் இறந்ததைவிட அதிகமாக அவனே சோகம் பிடித்துக்கொண்டது. அச்சமயம் எல்லோரும் ஆச்சரி யப்படும்படி சாம்பமூர்த்தி அங்கு ஒரு உயிரற்ற ஜடப்பொருள் போல் வந்து "அப்பா!" என்று நடராஜனேச் சேர்த்துக்கட்டிக்

கொண்டான். அதற்குமேல் அவன் வாய் அடைத்துவிட்டது. பேசவே முடியவில்லை.

மறுபடியும் இந்த அதிர்ச்சியினால் நடராஜனுக்கு எங்கு மூளை கலங்கிவிடுமோ என்கிற பயம் கண்ணம்மாளுக்கு உள்ளூர உண்டாகிவிட்டது. தானே தமயனிடம் சென்று "அண்ணா! அப்பாவின் புனர்ஜென்மத்தின் பிறகாவது அவரைப் பார்க்க வேண்டுமென்று வந்ததுபற்றி மிக்க சந்தோஷம். அவருக்கு மறுபடியும்... பழயபடி ஆகாதிருக்கும்படி பாருங்கள். அதிக அதிர்ச்சி கூடாது" என்று அவளாகவே முன்கூட்டிக் கூறினாள்.

மதுரத்தின் சிறுபிராயத்தில் அவள் எப்படி இருந்தாளோ அதேமாதிரி இப்போது கண்ணம்மாளின் தோற்றம் சாம்பமூர்த்திக்குத் தெரிந்தது. இவளைப் பார்த்து எத்தனையோ வருடங்கள் ஆகிவிட்டதால் முற்றிலும் மதுரத்தைப்போலவே காணப்பட்டாள். சின்னஞ்சிறு குழந்தையின் தலையில் இடி விழுந்ததுபோலான சமயத்திலும் நாம் எட்டிப் பார்க்காதிருந்தும் கபடற்ற இக் குழந்தை முன் கூட்டிப் பேசியது அவனுக்கு தன் துர்க்குணத்தை இடித்துக் காட்டுவதுபோன்றும் தான் செய்த அபராதத்திற்குத் தண்டிப்பது போன்றும் தோன்றியது. அவள் சிறுமியானாலும் தகப்பனார் விஷயத்தில் கூறிய வார்த்தைகள் மிகவும் சரியாகப்பட்டன. ஏற்கெனவே உள்ள மன அதிர்ச்சியில் இன்னும் அதிர்ச்சி உண்டாவது பிசகு என்றும் உணர்ந்தான்.

அவனால் கண்டுகொள்ள முடியாத பலவிதமான உணர்ச்சிகள் அவனை ஒரே விநாடியில் ஒன்றன்பின் ஒன்றாய் தாக்கிவிட்டன. கண்ணம்மாளை இழுத்து அவளிருகைகளையும் சேர்த்துப்பிடித்துக் கொண்டு கோவெனக் கதறிவிட்டான். கண்ணம்மாளும் தாங்க மாட்டாது தேம்பியழுதவாறு "அண்ணா! மன்னி, குழந்தைகள் எல்லோரும் க்ஷேமமா?...பாபு இப்போது எவ்வளவு பெரியவனாய் வளர்ந்திருக்கிறான்? என்ன படிக்கிறான்? எங்களை எல்லாம் அவனுக்குத் தெரியவே தெரியாதல்லவா....ச்வர்ணம்பாளுக்கு எங்களை நினைவிருக்கிறதா! படிக்கிறாளா! பாடுகிறாளா!" என்றெல்லாம் யோக க்ஷேமம் விசாரித்தவாறு அவன் மனத்தில் மங்கிக்கிடந்த ஆசையையும் ஆச்சரியத்தையும் தூண்டுவதுபோல் கேட்டாள்.

உண்மையில் தகப்பனும் பிள்ளையுமாயிருப்பினும் ஒருவரையொருவர் பார்ப்பதே துர்லபமாகிவிட்டபிறகு யாருடைய குடும்ப விஷயம் யாருக்குத் தெரியும்? "எல்லோரும் சௌக்கியம்....கண்ணம்மா!...அக்கா இறக்கும்போது ஏதாவது சொன்னாளா?".... என்றான்.

**கண் :**—அண்ணா! இனி அந்த வார்த்தைகள் எதற்கு? மிகவும் வருந்தினாள். கண்ணீர்விட்டாள். பிராணன் போகும்போதுகூட

"கடவுளே! என் அண்ணனையும் அவன் குடும்பத்தையும் காப்பாற்று. அவனுக்கு நல்ல புத்தியைக் கொடு. முன்னறி தெய்வமாகிய பெத்த பிதாவிடமாவது பாசத்தை உண்டாக்கு. அவனை வீணாகக்கெடுக் காதே" என்றெல்லாம் வேண்டினாள்.

சாம்பமூர்த்திக்கு இன்னும் துக்கம் பீறிக்கொண்டு வந்தது. உடன்பிறந்த பாசத்தின் வேகம், தான் திரும்பிப் பாராதிருக்கையில் கூட இம்மாதிரிப் பிரார்த்தனை செய்து உயிர் துறந்தாளே என்று நினைக்க அவன் மனம் முற்றிலும் மாறிவிட்டது. "இத்தனை குழந்தை களுடன் என் தகப்பனார் சிறிய இடத்தில் குடி இருக்கும் கண்ராவி இப்போதுதான் தெரிந்தது. நான் அவர் வயிற்றில் பிறந்து இத்தனை பணம் சம்பாதித்து என்ன உபயோகம்? இன்று நாம் நமது பிதாவை அலக்ஷியம் செய்ததுபோல் நாளை நம் பசங்கள் நம்மைச் செய்தால் அப்போது என் மனது எப்படியிருக்கும்.

இதோ! கண்முன்பே மனைவி அலக்ஷியம் செய்ததுமல்லாது தன் மனிதரிடம் பாசத்தைக் காட்டவில்லையா! அதனால்தானே என் பாழும் புத்தியின் இருள் நீங்கியது. சீச்சீ...இனிமேல் அரை க்ஷணம் அப்பாவை இந்த தள்ளாத வயதில் துக்கப்பட்ட நிலையில் உழைத்துக் கஷ்டப்பட வைக்கக்கூடாது. அவர் ஆயுள் காலம் வரையில் அவரை நான் இனி கைவிடமாட்டேன். எனது 400 ரூபாய் சம்பளத்தில் 100 ரூபாய் அவருடைய குடும்பத்திற்குக் கொடுத்தால் சரியாகிறது. இனியும் மனைவிக்கு பயப்படுவதா...உம். இனி இஜ்ஜென்மாவிலில்லை" என்று தனக்குள் பலமானதோர் தீர் மானத்தைச் செய்துகொண்டான்.

சின்னம்மாளிடம் சென்று "சித்தி! நானே பொல்லாதவனோ, என் மனைவியே பொல்லாதவளோ....இதுவரையில் நமக்குள் பிரிவு காலம் இருந்தது. என் முட்டாள்தனத்தை நான் உணர்ந்து வருந்து கிறேன். நாங்கள் என்ன குற்றம் செய்திருந்தாலும் எங்களை மன்னித்துவிடு. இதற்குமேல் நான் என்ன சொல்வேன். எல்லாம் காலச் சக்கரத்தின் கோலம் இப்படியாட்டிவிட்டது" என்று கூறினான்.

சாம்பமூர்த்தியின் மாறுதல் ஒவ்வொருவரையும் பிரமிக்கச் செய்துவிட்டது. பிறகு தகப்பனாரும் பிள்ளையும் வெகு காலமாகப் பிரிந்திருந்த கதைகளையும் மதுரத்தின் பரிசுத்தத்தையும் இறுதியில் அவள் செய்துச் சென்ற பிரமாணத்தையும் பற்றிப் பேசிக்கொண் டார்கள். மதுரத்தின் காரியத்தைச் சாம்பமூர்த்தி உடனே ஒப்புக் கொண்டு வெகுவாய் சந்தோஷித்தான்.

சில வருடங்களாக அவன் சீர்திருத்த சங்கத்தின் காரியதரிசி யாக விருப்பதால் அவன் மனம் பூராவும் முன் பேசிய விஷயத்தில் மாறிவிட்டது "அப்பா! கிருஷ்ணன் எங்கே?"

நட :—தங்கமான பிள்ளை. அவனை நான் படுத்தியபாடு தெய்வத்திற்குச் சகிக்கவே சகிக்காது. எல்லாவற்றிற்கும் காரணம் சின்னம்மாளும் அவள் தாயாரும் தான்...உம் கைத் தவறிய பண்டத்தைப்பற்றி இனி பேசி லாபமென்ன?....அவன்தான் மதுரத்தின் மறைவால் புழுவாய்த் துடிக்கிறான். ஆத்தங்கரை மாமரத்தடியிலேயே கிடக்கிறான். சாப்பாடுகூடச் சரியாய் ஏற்றுக்கொள்வதில்லை...சாம்பமூர்த்தி! மதுரத்தை இழந்த விசனம் மறைவதற்குக் கடவுள் மீண்டும் உன்னைப் பெற்றதுபோல் காட்டியிருக்கிறார். இனி நான் தன்யனாவேன்.

சாம்பமூர்த்தி கிருஷ்ணனிடம் சென்று அவனிடமும் மன்னிப்புப் பெற்றான். அவனுக்குத் தானே நல்லதொரு வேலையும் செய்து வைப்பதாகக் கூறித் தேற்றினான். அவன் குழந்தைகளைக் குலாவினான். குடும்பத்தில் சமரஸம் ததும்பிற்று. சாம்பமூர்த்தியே முன் நின்று மதுரத்தின் கிரியைகளை நடத்திவைத்தான்.

சா :—அப்பா! இனி இம்மாதிரி கஷ்டவாஸம் வேண்டாம். அடுத்த மாசி மாதத்தில் உங்கள் பேரன் பாபுவுக்கு உபநயனம் செய்யலாமென்று உத்தேசம். இப்போதே இந்த விவாகத்தை முடித்துவிடலாம். நீங்கள் குடும்பத்துடன் இனி என்னிடமே இருங்கள். என் கண் திறந்துவிட்டது. இனி உங்களை இப்படி விடமாட்டேன்.

நட :—மூர்த்தி! இத்தனை பெரிய பாரதம் நிகழ்ந்ததற்கும் உன் மனைவியும், என் மனைவியும் மாமியாருந்தான் காரணம் என்பது மறந்துவிட்டதா! மீண்டும் இம்மாதிரி சண்டைக்கு இடங்கொடுக்கக்கூடாது. உன்னுசைக்கு உன்னோடு சில மாதங்கள் நான் இருக்கிறேன். இவர்களுக்கு நீ ஆதரவளித்துக் காப்பாற்று. அதுதான் போதும். இனி யாரும் செத்தாலும் சாகலாம். இரண்டாந்தரம் விவாகம் செய்துகொள்ளக்கூடாதென்கிற வைராக்கியம் எனக்கு உண்டாகிவிட்டது. அப்படி செய்து கொண்டாலும் நன்றாக ஆய்ந்தோய்ந்து பார்த்துச் செய்யவேண்டும்" என்றார்.

பிறகு சாம்பமூர்த்தியின் வற்புறுத்தலின் மீது கிருஷ்ணன் அவன் குழந்தைகள் உள்பட எல்லோரையும் சாம்பமூர்த்தி தன் வீட்டிற்கு அழைத்துச் சென்றான். அப்போது வீடு எப்படி இருக்கிறது. சீதாவின் தங்கைக்கு சற்று குணம், அவளைக்காண பல உறவினர்கள் வீட்டுநிறைய கல்யாணம்போல் நிரம்பி இருந்தார்கள்.

சாம்பமூர்த்தி சகல கணக்குகளையும் குளோஸ் செய்திருக்கையில் இப்படி அட்டகாஸமாக இவள் என்ன தைரியத்தில் செலவு செய்கிறாள் என்கிற சந்தேகம் வேறு உண்டாகிவிட்டது. அந்த மகராஜி இந்த மாமியார் வீட்டு பட்டாளங்களை எல்லாம் கண்டதும்

தடைகட்டிய நாகப்போலும் ஒன்றுமே தோன்றாத குழப்பமும், தன்னை மீறிய ஆத்திரமும் ஒருங்கே எழுப்பெற்றவளாயும் அப்படியே நின்றுவிட்டாள்.

சாம்பமூர்த்தி அவளை லக்ஷியமே செய்யவில்லை. தன்னுடைய படுக்கை அறையில் கிருஷ்ணன், தன் தகப்பனார், தம்பிகள் முதலியோரை இருக்கச் செய்தான். மற்றொரு அறையை ஒழித்து சின்னம்மாள், கண்ணம்மாள் முதலியோரை இருக்கச் செய்தான். சமையல்காரனிடம் சொல்லி இன்னொருச் சமையல்காரனை அழைத்துவரச் செய்தான்.

சீதாவை உற்றுக் கவனித்தான். அவள் கழுத்தில் மூன்று வடம் போட்டுக்கொண்டிருந்த சங்கிலியில் இரண்டு வடம் மட்டும் இருப்பதைக் கண்டதும் விஷயம் விளங்கிவிட்டது. தன் கணவனையும் மதியாது நகையையாவது விற்றுத் தன்னுடன் பிறந்தவர்களுக்குச் செய்யும் ஆசையுள்ள மனுஷி தன்னையொரு பொம்மையாக்கிவிட்ட அவமானத்தைச் சகிக்கவே முடியவில்லை. அவளுடன் பேசவும் இல்லை. வந்த மறுநாளே மதுரத்தின் இறுதிக் கோரிக்கையை நிறைவேற்றிவிட்டான். சீதாவுக்கு ஒன்றுமே புரியவில்லை. தங்கையையும், மற்றவர்களையும் அழைத்துக்கொண்டு அன்றே தன் பிறந்தகம் போகக் கிளம்பிவிட்டாள்.

சாம்பமூர்த்தியின் ஆத்திரம் எல்லை கடந்தது. "என் குழந்தைகளை அழைத்துப் போகவேண்டாம். என் குழந்தைகளை ஆதரிக்க என் மனுஷ்யாள் இருக்கிறார்கள். நீ மட்டும் உன்னிஷ்டம்போல் இருக்கலாம்" என்று கண்டிப்பான உத்திரவு போட்டான்.

சீதா :—என்ன !...உங்கள் குழந்தைகளா ! உங்கள் மனிதர்களா !...அப்படி என்றால்...

சாம் :—அப்படி என்றால் அதுதான். நீ காட்டிய மித்திர பேதந்தான். இனி நான் பழய முட்டாள் இல்லை. நீ மானத்துடன் அடங்கி ஒடுங்கி வாழவேண்டுமாயின் உலகத்தவர்களைப்போல் இரு. இல்லையேல் உன்னிஷ்டப்படி ஆடலாம். இனி உன் கட்டுக்குப் பயந்து யாரையும் இழக்கமாட்டேன். ஜாக்ரதை !—என்று கண்டிப்பாய்க் கூறிவிட்டு அவ்விடத்தில் நிற்காமல் சென்றான்.

மகாரோஷக்காரியும் கோவக்காரியுமான சீதா அந்த ஆத்திரத்தில் குழந்தைகளையும் பிடிவாதமாய் இழுத்துக்கொண்டு போய்விட்டாள். அதற்கும் சாம்பமூர்த்தி சட்டைசெய்யவில்லை.

மேற்கொண்டு இரண்டு மாதமாயிற்று. ஒரு பெரிய கம்பெனியில் கிருஷ்ணனுக்கு மாதம் 40 ரூபாய் சம்பளத்தில் ஒரு வேலை செய்து வைத்தான். தான் லஞ்சம் வாங்கிச் சேர்த்துள்ள பணத்

தில் ஒரு வீட்டை ஐயாயிரம் ரூபாயில் வாங்கி தகப்பனருக்குக் கொடுத்ததுடன் அவருக்கு மாதம் 100 ரூபாய் கொடுக்க ஆரம்பித்தான்.

* * * * *

வீம்புக்கு வீரியம் கொண்டாடமுடியுமா! இத்தனை தடபுடலில் வாழ்ந்த சீதா தமயனிடம் அடிமைபோல் குழந்தைகளை வைத்துக் கொண்டிருப்பதென்றால் நீடிக்க முடியுமா! மரியாதை குறைந்தது. "கணவனிடம் சண்டை போட்டுக்கொண்டு வந்துவிட்டாள்; கணவனை மதிக்கவில்லை" என்கிற சின்னச் சொற்கள் பிறந்தபிறகுதான் அம்மாளுக்கு புத்தியில் உரைத்தது.

பிறகு கணவனை வந்து அழைத்துப்போகும்படியும் தான் அவனிஷ்டப்படியே இருப்பதாகவும், தன் குற்றத்தை மன்னிக்கும்படியும் வணக்கமாக எழுதியிருந்தாள். 'கழுதை வழிக்கு வரும்' என்று மட்டும் சாம்பமூர்த்தி எதிர்பார்த்தான். ஆனால் அவன் போகவில்லை. பணத்தைமட்டும் மணியார்டர் செய்துவிட்டான்.

அம்மாள் குழந்தைகளுடன் வந்து சேர்ந்ததும் முதன் முதல் குடும்பத்திற்கு வந்த மாட்டுப்பெண்போல் மாமனர் மாமியாருக்கு நமஸ்காரம் செய்து அடக்கமாக வாழ்க்கை நடத்த வாரம்பித்தாள். இது கண்ட மூர்த்திக்கு மிகுந்த த்ருப்தியாகிவிட்டது.

* * * * *

மாசி மாதம். எங்கும் மணிப்பூணூல் வைபவம் ஆரம்பமாகிவிட்டது. மூர்த்தியின் மகன் பாபுவுக்குப் பூணூல் கல்யாணம் தடபுடலாக நடக்கிறது. நடராஜனும் கிருஷ்ணனுந்தான் சகல ஏற்பாடுகளும் செய்து நடத்துகிறார்கள். ஆனால் அனேக வருஷங்களுக்கு முன்பு இதே மாசி மாதத்தில் தன் சிநேகிதர்களின் வீட்டு மணிப்பூணூல் நடந்ததும், தனக்குக் கல்யாணம் நிச்சயமானதும் சகல கதைகளும் கிருஷ்ணனுக்கு ஞாபகம் வந்து அவனை முற்றிலும் குழப்பி கண்களில் நீர் துளிர்க்கச் செய்தன.

இதைப் பார்த்துக்கொண்டு வந்த அவன் மனைவி மகா புத்திசாலியாகையால் தெரிந்துகொண்டாள். "பழங்கதைகளின் அலைமோதலா....எனக்கும் ஏதேதோ ஞாபகம் வருகிறது. சிறிய குடும்பங்களில் இத்தனை ஒற்றுமையுண்டாகி அன்பு ததும்புவதை அக்கா இருந்து பார்த்தால் எத்தனை சந்தோஷமாக இருக்கும்? உம். இது தான் உலகப் புசல்காற்று என்றும், வாழ்க்கையின் பூகம்பமென்றும் தோன்றுகிறது" என்றாள். அவள் கண்களும் நீரை உதிர்த்தன.

அச் சமயம் ஸரஸ்வதி ஓட்டமாக ஓடிவந்து "அப்பா! ஆத்துக்கு வாயேன். மன்னியம்மா வந்துட்டா! மன்னியம்மாதான் அப்படியே வந்துட்டா" என்று தாங்கமாட்டாத சந்தோஷத்துடன்

கூறி கையைப்பிடித்து இழுத்துக்கொண்டு ஓடினாள். இருவருக்கும் ஒன்றுமே புரியவில்லை. கூடவே ஓடினார்கள் வீட்டில் மேஜைமீது பெரிய என்லார்ஜ்மெண்டு படம் ஒன்று வைத்திருந்தது கண்டு அளப்பரிய ஆச்சரியமடைந்து படத்திற்கு நமஸ்காரம் செய்து கண்ணீர் பெருக "இது ஏதம்மா!" என்றான்.

ஸர:—நம்ப நாகலக்ஷ்மி மாமி மகன் இதை அவாம்மா கொடுக்கச் சொன்னதாகக் குடுத்துச் சென்றார். மன்னியம்மா அப்படியே தத்ரூபமாயில்லையாப்பா! "கண்ணா! சாப்பிடும்மா..." என்று சொல்வது போலிருக்கு பாத்தியா—என்றபோது அச்சிறுமி யின் கண்ணும் குளம்போல் தேங்கிவிட்டது.

"வாழ்க்கையில் எத்தனை மாறுதல்! எத்தனை பயங்கரம்! எத்தனை பூகம்பம்! எத்தனை புசல் காற்று! எத்தனை சோதனை! எத்தனைத் துன்பம்... அடாடா! அவைகளை யெல்லாம் ஜெயித்த புனிதவதி என் தாயல்லவா... என் தாயின் தரிசனமே எனக்கு நித்ய கல் யாண வைபவ சுகம். கண்ணா!...நான் சொல்வது சரிதானே... என் தாய் உனக்கும் தாயல்லவா?" என்று இன்ப வெறி பிடித்தவன் போல் கூறினான். "ஆமாம்...எனக்குந்தாய். என் வாழ்வின் இருளைப் போக்கிய உத்தமத்தாய். அணைந்துவிட்ட என் ஜீவியத் தின் விளக்கை ஏற்றிய புனிதத்தாய். நாம் எத்தனை ஜென்மம் எடுத் தாலும் மறக்கமுடியாத பேருபகாரியான இன்பத்தாய். இந்த மகா பரிசுத்தாத்மாவினாலன்றோ நமது வாழ்க்கை நடக்கின்றது. இவர்களுடைய துல்லியமான இதயத்தின் ஆசி நம்மை என்றும் சூழ்ந்திருக்கும். இவர்கள் தரிசனமே நமது பாவனமாகும்" என்று வாய் முணுமுணுத்தது. கைகள் தாமாகக் குவிந்தன. கண்ணீர் முத்துக்கள் உருண்டு விழுந்து சிதறின. அந்த உருவம் எல்லையற்ற இன்பப் புன்முறுவலுடன் இவர்களை அகமகிழ ஆசீர்வதித்தது.

" அகழ்வாரைத் தாங்கு நிலம்போலத் தம்மை
இகழ்வார்ப் பொறுத்த றலை "

—திருக்குறள்.

பொங்கும் மங்களம் எங்கும் தங்குக.

முற்றிற்று.

18042

# உணர்ச்சி வெள்ளம்

வை. மு. கோதைநாயகி அம்மாள்

எழுதிய

51-வது நாவல்

"ஜகன்மோகினி" ஆபீஸ்,

26, தோடித் தெரு,

திருவல்லிக்கேணி, சென்னை.

காபிரைட்]

[ரூ. 1/8.

சகல உரிமைகளும் ஆசிரியையுடையவை.

*Fifty First "JMO" Publication*

ALL RIGHTS BELONG TO THE AUTHORESS.

"ஜகன்மோகினி" பிரஸ், திருவல்லிக்கேணி, சென்னை.

பல்லாயிரக்கணக்கானவர்
படித்து மகிழ்ந்த
நமது பொன்விழா நாவல்

## ஆ த் ம ச க் தி

முதல் பதிப்பு—ஜனவரி 1940.
இரண்டாம் பதிப்பு—ஏப்ரல் 1940.

**11 ஆப்டோன் படங்கள்**

பல வர்ணங்களில் அச்சிடப்பட்டுள்ளன.
தபாற் செலவு உள்பட
உள் நாடு — ரூ. 1-4
வெளி நாடு — 2 ஷில்லிங்
அனுப்பிப் பெற்றுக்கொள்ளவும்.

நீங்கள் பல வருடங்களாக
எதிர்பார்த்தபுதிய பதிப்பு

## மா த வ ம ணி

**முற்றிலும் புதிதாக மாற்றி**
**பெரிதாக எழுதப்பட்டுள்ளது**

(முதல் பதிப்பு 24 பக்கங்கள் 3 அணு)
இரண்டாம் பதிப்பு 64 பக்கங்கள் 4 அணு
தபால் செலவு உள்பட
உள்நாடு ரூ. 0—4—9 ஸ்டாம்பு
வெளி நாடு-2 போஸ்டல்கூப்பன்கள்
அனுப்பிப் பெற்றுக்கொள்ளவும்.

.............................இங்கே கத்தரிக்கவும்.............................

" ஜகன்மோகினி "

மானேஜருக்கு,

இதனுடனிருக்கும் விவரப்படி, புது சந்தாநேய(ரை / ர்களை)ச் சேர்த்து ரூ...... போஸ்டல்ஆர்டர் கிராஸ்செய்து அனுப்பியிருப்பதைப் பெற்றுக்கொண்டு, நான் குறிப்பிட்டுள்ள இனும் நாவ(லை / ல்களை) அனுப்புவதுடன், எனது சந்தா நம்பரையும் சீட்டுக் குலுக்குவதில் சேர்த்துக்கொள்ளவும்.

சந்தா. ந : கையொப்பம் :

புது சந்தாநேயரின்
விலாசம் :

இனும் நாவல்கள்.

"JAGANMOHINI" Vol. XVII ..o. 6. Regd. No. M. 2210.


# தலைவலிக்கு



ஆஸ்பிரினை விலக்குங்கள்

இருதயக் கோளாறுகளையும் விலக்குங்கள்




## அம்ருதாஞ்சனை

## உபயோகியுங்கள்

எல்லா வலிகளையும், சுளுக்குகளையும்
சொஸ்தப்படுத்துகிறது

## அம்ருதாஞ்சன் லி

சென்னை

Printed &